www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

மாசி 2000

இதழ் -11

சுதந்திர தினம் கொண்டாடினமாம் அவை. ஆனால் அவையின்ற ஜனாதிபதிக்கே சுதந்திரமில்லை . . . !!

# சந்திரிகாவின் மோசடி அரசியல்!

பெப்ரவரி 4ம் திகதி சந்திரிகா தனது மறைவிடத்திலிருந்து ஆற்றிய உரையில், காணப்பட்ட சில விடயங்கள், அவரதும் அவரது அரசினதும் உள்நோக்கங்களையும் அரசியல் வங்குரோத்தையும், அதிகார திமிரையும் மற்றுமொரு கோணத்தில் நமக்கு அம்பலப்படுத்துகின்றன. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீரவு கண்டு யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வருவதற்கு, அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் பிரதானமாக விடுதலைப்புலிகளுக்கும் அழைப்பு விடுக்கும் அவரது உரையில் பொதிந்திருந்த விடயங்கள் இவை. பொதுவில், முன்னுக்கு பின் முரணாக கூற்றுக்களை பகர்வதில் சந்திரிகா சாதனை படைத்துள்ளார் என்ற போதிலும், சிங்கள மக்களுக்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தினத்தில் அவர் ஆற்றிய உரை என்பதால் குறிப்பாக இதில் நாம் கவனம் குவித்து அதன் உள்கிடக்கைகளை கண்டறிய வேண்டியுள்ளது.

கூற்றுக்கள் வாரியாக அவற்றை பரிசீலிப்போம்.

“மக்கள் தாம் உண்டு பண்ணிய வடுக்களை தாமே குணப்படுத்துவதற்கு இப்போது தீர்மானித்து விட்டனர்”. இது அவரது கூற்று

ஒரு கோடிக்கும் மேற்பட்ட சிங்கள மக்களுக்கு தலைவராக இருந்தும், தனது சொந்த மக்களையே இக்கூற்றின் மூலம் அவர் அவமானப்படுத்துகின்றார். சிங்கள ஆழுங் குழுமத்தினால் நடாத்தப்பட்டு கொண்டிருக்கும் அத்தனை கொடுரங்களுக்கும் அவர் மக்களை பாத்திரவாளிகாளக்கி தான் தப்பித்துக் கொள்கின்றார். அதிகாரத் திமிரும் மக்கள் மீது பழிபோட்டு தன்னைக் காப்பாற்றி கொள்ளும் கோழைத்தனமும் கொண்டதாக இக்கூற்று அமைகிறது.

காலங்காலமாக மேட்டுக்குடிகளாக இருந்து, ஆளுங்குழுமத்துடன் கைகோர்த்துக்கொண்டும், தானும், தனது தாய் தந்தையரும் மூதாதையரும் இழைத்த அட்டுழியங்களுடன், சிங்கள மக்களை இனவாத சித்தாந்தத்திற்குள் மூழ்கடித்து அதன் மூலம் பெற்ற அவர்களது ஆதரவுடன் இங்குள்ள ஏனைய சமூகங்களுக்கு தொடர்ச்சியாக கொடுமை இழைத்த ஆழும் குழுமத்தையும் தன்னையும் இவர் பரிசுத்தமானவர்களாக காட்டுகின்றார். தன்னை தவிர்த்து இதுவரை இருந்து வந்த ஆட்சியாளர்களை ஒப்புக்கு குற்றம்சாட்டி வந்த இவர் தற்போது மக்கள் மேல் பழியைப் போட்டுவிட்டு தானும் அந்த வரலாற்று கறைகளில் ஒருவராகின்றார். அதிகாரத்துவ, மேட்டுக்குடியின் பிரதிநிதியாக அவர் அப்பட்டமாக தன்னைக் வெளிக்காட்டும் கூற்று இது.

“எதிர்கட்சியொன்றும் தீவிரவாத குழுவொன்றும் யுத்தத்தை முடிவிற்கு

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## தென் தமிழீழத்தில் ஹர்த்தால்!

மட்டக்களப்பு, அம்பாறை (பட்டிப்பளை) பிராந்திய மக்கள் தமது எல்லைகளை விட்டு வெளியில் செல்வதற்கு பொலிஸ் அனுமதியெடுக்க வேண்டும் எனும் புதிய கட்டுப்பாட்டை சிறிலங்கா அரசு ஏற்படுத்தியுள்ளது. வெளியிடங்களுக்கு செல்லவுள்ள மக்கள் இரண்டு கிழமைகளுக்கு முன்னதாகவே பொலிசின் அனுமதியைப் பெற்றிட வேண்டும். ஆரம்பத்தில் வாகனங்களுக்கு மாத்திரமேயிருந்த இந்த பாஸ்முறையை தற்போது மனிதர்களின் மீதும் திணித்து நமது மனித கௌரவத்தையே அவமானப்படுத்துகிறது இந்த இனவெறி அரசு. இதேபோன்றதொரு நிலைதான் வடதமிழீழத்தில் பல வருடங்களாக நீடித்து வருகிறது.

பொலனறுவை பொலிசார் வழிப்பறிக் கொள்ளையர் கும்பல் போல் மன்னம்பிட்டியைக் கடந்து செல்லும் மக்களின் அடையாள அட்டையை பறித்து வைத்துக் கொள்கின்றனர். இந்த அட்டுழியங்களையெல்லாம் சகித்துக் கொண்டிருக்க முடியாத மக்கள் தாமாகவே போராட்டத்தை ஆரம்பித்தனர். பாஸ்முறைக்கு எதிராக ஹர்த்தால் அனுஷ்டித்து தமது கோபத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர். இதன் விளைவாக பெப்ரவரி 15ம் திகதியிலிருந்து வரவிருந்த பாஸ்முறை தற்காலிகமாக நிறுத்திவிட்டிருப்பதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதை நாம் முழுமையாக நம்பாவிடினும் நமது மக்களின் போராட்ட பலம்தான் அரசை இந்தளவாவது பணிந்து வரச் செய்துள்ளது என்பதையிட்டு நாம் பெருமிதம் கொள்வோம்.

இத்தகைய வெகுஜனப் போராட்டங்கள் தொடர்ச்சியாக மக்களால் முன்னெடுக்கப்படுவதை அனைத்துத் தரப்பினரும் ஊக்குவிக்க வேண்டும். அரசின் பல்வேறு அடக்குமுறை வடிவங்களுக்குமெதிராக முன்னெடுக்கப்படும் மக்கள் போராட்டங்களும் தேச விடுதலைப்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## மாணவர் போராட்டம்!

யாழ்ப்பாணத்தில் 436 பாடசாலை மாணவர்கள் ஒன்றிணைந்து, இராணுவத்தினரால் கைது செயயப்பட்ட தமது சக மாணவர்ளை விடுவிக்குமாறு கோரி போராட்டம் நடத்தியுள்ளனர். போராட்டம் வெற்றி பெற்று மாணவர்களின் பலமானது மறுபடியும் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடுமையான நெருக்கெடிகளுக்கும் இராணுவத்தின் கூரிய கண்காணிப்புக்கும் மத்தியில் இப்போராட்டம் நடைபெற்றுள்ளது. வெற்றி பெற்ற மாணவர் சமூதாயத்தை பாராட்டுவதும் பக்க பலமாக இருந்து பாதுகாப்பதும் நமது தேசத்தின் கடமையாகும்.

ஆரம்பத்தில் மாணவர்களை தாம் கைது செய்யவே இல்லையென கூறிய இராணுவம், மாணவர் போராட்டம் உக்கிரமடைவதையும், விரிவடைவதையும் கண்டு விரைவில், தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்கிறது. மாணவர்களை விடுதலை செய்கின்றது. படைத்தலைமையானது, தேவையாயின் ஒரு சில படையினரில் குற்றத்தை சுமத்திவிட்டு தான் மன்னிப்பு கோருவதாக பாசாங்கும் செய்கின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர்ப்புகளை பலவீனப்படுத்துவதற்கு படையினர் இருவித வழிமுறைகளை சமகாலத்தில் பயன்படுத்துகின்றனர். ஒன்று மக்களுக்கு சலுகைகள் அளிப்பது மற்றது அடக்குமுறைகளை பிரயோகிப்பது. ஆக்கிரமிப்பு படையினர் என்ற விதத்தில் முதலாவது வழிமுறையானது சில தற்காலிக வெற்றிகளை அவர்களுக்கு தந்த போதிலும், அது நீடிப்பதில்லை. இருந்து போதிலும் எதிரிகள் இப்படியான விடயங்களில் இருந்து படிப்பினைகளை பெற்று போராட்டங்களை விட்டு மக்களை தனிமைப்படுத்துவதில் தொடர்ந்தும் புதிய வழிமுறைகளை உருவாக்குகின்றனர் என்பதையிட்டு நமக்கு எப்போதும் எச்சரிக்கை அவசியமாகும்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## சிறிலங்கா சுதந்திர தினம்: தமிழீழம் பகிஷ்கரிப்பு !!!

சிறிலங்காவின் சுதந்திர தினத்தை மட்டக்களப்பு மக்கள் துணிகரமாக பகிஷ்கரித்திருப்பது நமது தேசத்தின் தன்மானத்தை மேலும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதாயுள்ளது. தங்களின் சுதந்திர தினத்தை எம்மீது நிர்ப்பந்தமாக திணித்து அதை நாமும் எமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு அடிமைகள் போல் ஏற்கச் செய்வதன் மூலம் தனது ஆதிக்கத் திமிரை வெளிப்படுத்தி வந்த சிறிலங்கா அரசுக்கு இம்முறை தென்தமிழீழ மக்கள் நல்ல பாடம் படிப்பித்துவிட்டனர். முன்பெல்லாம் போராட்ட தரப்பினர் தான் சிறிலங்கா சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்கும் விதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவர். ஆனால் இம்முறை தமிழ்மக்கள் தாமே அரசின் கடும் நிர்ப்பந்தத்தையும் மீறி பகிரங்கமாக பகிஷ்கரிப்பில் இறங்கினர். இதன் மூலம் நாம் சிறிலங்கா பிரஜைகளல்ல என்பதை திட்டவட்டமாக அரசுக்கு உணர்த்திவிட்டனர். தென்தமிழீழத்தில் வெளிப்பட்ட நமது மக்களின் தன்மான உணர்வும் எதிர்ப்பும் தேசமெங்கும் காட்டுத் தீ போல் பரவிட வேண்டும். அந்த ஆக்ரோஷ பிளம்பில் இனவெறி தீய்ந்திட வேண்டும். இது தான் சிறிலங்கா ஜனாதிபதிக்கு நாம் அனுப்பும் சுதந்திர தினச் செய்தி !!!

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அமெரிக்கா – சிறிலங்கா
# ஆயுதப் பரிவர்த்தனை!

இனஅழிப்பிற்கு உட்படுத்தப்படுகின்ற எந்தவொரு தேசமும் தன்னை தற்காத்துக்கொள்வதற்காக ஆயுதமேந்திப்போராட உரிமை கொண்டவை. அடக்குமுறைகள் இல்லாவிட்டாலும் கூட தேசங்கள் தற்காப்பிற்காக ஆயுதம்ஏந்தும் உரிமை கொண்டவை. இத்தேசங்கள் சுயநிர்ணய உரிமையின்பாட்பட்டு தமது அரசியல்தலைவிதியை தாமே நிர்ணயிக்க முடியும். தனியரசை அமைக்கவும் முடியும். தாராண்மைவாதக் கோட்பாட்டை அடிப்படையாக கொண்ட, தேசங்களின் ஒன்றியத்தின் (United Nation's charter) அங்கீகரிக்கப்பட்ட சாசனத்தின் சரத்துக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இந்த ஆவணத்தில் அமெரிக்க அரசும் அதன் கூட்டாளிகளும் சிறிலங்கா அரசும்கூட கையொப்பம்இட்டுள்ளன. இருந்தும் நமது தேசம் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? ஆயுதங்களை களைந்துவிட்டு சமாதானத்திற்கு வரும்படி எம்மை மாத்திரம் இவர்கள் எப்படி கோரமுடியும்? இல்லாவிட்டால் எமது தேசத்தை அழித்தொழிப்போம் என ஏன் கங்கணம்கட்ட வேண்டும்.? சிறிலங்கா அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் தவிர்க்க முடியாத விளைவல்லவா இந்த போராட்ட வடிவம். ஆனாலும், அன்றிலிருந்து இன்றுவரை இந்த அரசபயங்கரவாதிகள் எம்மை பயங்கரவாதிகளாக உலகுக்கு காட்ட முயன்று வருகின்றனர்.

இந்த இனஅழிப்பு அரசுடன், இப்போது அமெரிக்க பயங்கரவாதிகள் பகிரங்கமாகவே இணைந்து கொண்டுள்ளனர். முன்னூறு வருடங்களுக்கு முன்பு இன்றைய அமெரிக்க தேசம் ஆயுதமேந்தி விடாப்பிடியாக போராடி பிரித்தானியாவின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டது. அவர்களை பயங்கரவாதிகளாக காட்ட அப்போது எவரும் பட்டியல் வைத்திருக்கவில்லை. இன்றோ உலகம் முழுவதிலும்



எத்தனையோ பயங்கரவாதங்களை அமெரிக்க அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது? எத்தனையோ இலட்சம் மக்களை கொன்று குவித்துள்ளது? இன்றும் எத்தனையோ கோடி மக்களை பஞ்சம் பட்டினியில் வதைத்து மறைமுகமாக கொலை செய்து வருகின்றது? புதிய உலக ஒழுங்கு, உலக அமைதி என்று இப்போது இவர்கள் பசப்பினால் மட்டும் வரலாற்றின் இரத்தக்கறைகள் மறைந்துவிடுமா? கருமையான வரலாறு மறைந்து போகுமா?

ஹமாஸ் இயக்கத்தை, விடுதலைப் புலிகள் இயக்கத்தை இன்னும் இதுபோன்றவற்றை பயங்கரவாத இயக்கங்கள் என்று பட்டியலிட இந்த அமெரிக்க மற்றும் உலக பயங்கரவாத கும்பலுக்கு என்ன தார்மீகம்நியாயம் உள்ளது அவ்வாறாயின் பட்டியலில்முதலிடம்பெற வேண்டியது இந்த அமெரிக்க ஏகாதிபத்திய அரசுதான்.

தமிழ் தேசிய பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு தன்னளவிலும், தமது சிங்கள தேசத்தையும் சொற்ப அளவிலேனும் தயாரிப்பிற்குள்ளாக்காது, தனது யுத்த யந்திரத்திற்கு எண்ணையிட்டு புதுப்பித்துக்கொண்டிருக்கும் சிறிலங்கா இனவெறி அரசிற்கு, கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதி மிக்க ஆயுத தளபாடங்களையும் மற்றும் உதவிகளையும் வழங்கியிருக்கின்றது இந்த அமெரிக்க அரசு. அவ்வாறாயின் எது பயங்கரவாதம்? "மனித உரிமையின் காவலாளி" என தன்னைத்தானே அழைத்துக்கொள்ளும் அமெரிக்க அரசுக்கு அப்படி என்னதான் அடிப்படை நலன்கள் இதில் உள்ளன?

தமிழீழத்தின் அரிதான வளங்களையும், கேந்திர முக்கியத்துவத்தையும் அவர்களும் அவர்களின் கூட்டாளிகளும் அனுபவிக்கவும் கொள்ளையிடவும் நமது தேசத்தின் தீவிரமான தேசிய விடுதலைப்போராட்டம் ஒரு பிரதான தடையாக இருப்பதுடன் மற்றுமொரு உண்மையையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். அண்மைக்காலமாக அமெரிக்காவின் கவனம் தென்னாசிய பிராந்தியத்தில் அதிகரித்து வருகின்றது. இப்பிராந்தியத்தை வளைத்து தன் காலடியில் போட்டுக்கொள்ள அதன் இராணுவ பொருளாதார மற்றும் இராஜதந்திர முயற்சிகள் முனைப்படைந்துள்ளன. இதுவரை காலமும் இல்லாதவாறு அமெரிக்க அரசுத்தலைவர் ஒருவரின் இந்திய வருகை இதன் முக்கியத்துவத்தை காட்டுகின்றது. இந்திய உபகண்டத்திலுள்ள சிறிய பெரிய நாடுகளை முழுஅளவில் ஏப்பம் விட அமெரிக்கா நேரடியாக எத்தனிக்கின்றது. இதன் ஒரு பகுதியே சிறிலங்காவுடனான இராணுவ ஒப்பந்தங்களும் ஆயுத விற்பனையுமாகும்.

ஏற்கனவே சிறப்பு ஆயுத பயிற்சிகள், உளவுத்தகவல்கள், நிதி, தளபாடங்கள்என ஏராளம் வளங்களை சிறிலங்கா அரசுக்கு அமெரிக்கா வழங்கி வந்துள்ளது. அமெரிக்க அதிகாரிகள் நேரடியாக யுத்தமுனைக்கு சென்று வழிகாட்டல்களை செய்துள்ளனர். இதன் பின்னரும் புலிகள் அடைந்த வெற்றிகள் அமெரிக்காவையும் அச்சுறுத்துவதாக உள்ளது. எனவே இன்னும் அதிகளவில் நவீன, வலுவான படைக் கலங்களை வழங்குவதன் மூலம் சிறிலங்கா அரசின் போராற்றலை பலப்படுத்த நேரடியாகவே ஈடுபட்டுள்ளது. எப்படியும் எமது போராட்டத்தை பலவீனப்படுத்திவிட படாத பாடு படுகின்றது இந்த அமெரிக்க பயங்கரவாதம். இதன் தொடர்ச்சியான நீட்சியை இட்டு நாம் எச்சரிக்கை கொள்ள வேண்டும்.

## சிறி லங்கா அரசு :
# சட்ட முகமூடியும் இராணுவ சுயரூபமும்!

1994இல் சிறிலங்காவில் சந்திரிகா அரசு ஆட்சியேறிய போது எங்கும் "சமாதானம்"பாடப்பட்டுக்கொண்டிருந்தது. தானே ஒரு சமாதானப் புறாவாக அவதரித்திருப்பது போன்ற பிரமையை சந்திரிகா ஏற்படுத்திக் கொண்டிருந்தார். பதவியேற்பு அன்று தனது "மழலை" தமிழால் உரையாற்றி தமிழர் மனதில் இடம்பிடித்திட முயன்றார். வரிக்கு வரி "தமிழ்ச் சகோதரர்கள்" எனும் சொல்லை அள்ளி வீசினார். அதைத் தொடர்ந்து "பேச்சுவார்த்தை" நாடகம். ஈற்றில் தமிழ் மக்களை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்டு சமாதானத்தை நிலைநாட்டுவதற்கே தான் யுத்தம் செய்வதாக தனது இனவெறிக்கு முகமூடியணிவித்துக் கொண்டார் சந்திரிகா. அதுமாத்திரமன்றி கறைபடாத கைகளையுடைய தான் யுத்தத்திலீடுபடுவது யு. என். பி.யின் கடந்தகால தவறுகளின் விளைவினாலும், அவற்றைத் தீர்ப்பதற்காகவும் தான் எனவும் கூறிக்கொண்டார். ஒரு புறம் ஆக்கிரமிப்பு யுத்தம். மறுபுறம் சிவில் நிர்வாகத்தை ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் நிறுவிடும் முயற்சி. இதன் மூலம் "நீதியான வழியில் பிரச்சினைக்கு தீர்வு காண்பவராக" தன்னைக் காட்டிக் கொண்டார் சந்திரிகா. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் சிறிலங்கா அரசின் நீதிமன்றங்கள் மிகவும் அக்கறையுடன் செயற்படுத்தப்பட்டன. சிவில் வழக்குகள் உட்பட அரசியல் வழக்குகளும் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டன. கைது செய்யப்படுபவர்களின் குடும்பத்தினர் நீதிமன்றம் மூலம் தம்மவர்களை விடுவிக்கக்கூடிய நடைமுறையும் நடப்பிலிருந்தது. யுத்தக் குற்றவாளிகள் கூட நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். மாணவி கிருசாந்தி கூட்டு வண்புணர்ச்சி படுகொலை மற்றும் உறவினர் படுகொலைக்கு எதிரான வழக்குகள் அரசினாலேயே நடத்தப்பட்ட வழக்குகளாகும். அத்துடன் காணாமற் போனோருக்கான விசாரணைக் கமிஷனும் அமைக்கப்பட்டது. இவையாவும் சந்திரிகா அரசு "நீதிநெறி ஸ்தாபிக்கும்" அரசு எனும் மாயையை வெளியில் ஏற்படுத்தி வந்தது. சிங்களப் படைகளின் தமிழ் மக்கள் மீதான குற்றங்களை விசாரிக்கும் - தண்டிக்கும் நடவடிக்கைகள் தாராண்மைவாத கோட்பாடு சார்ந்த மனிதவுரிமை அடிப்படையிலேயே நடந்தது. தமிழ் மக்கள் மீதான இன அழிப்பின், தேசிய ஆக்கிரமிப்பின் விளைவான குற்றங்களாக இவை இருப்பதென்பது மறைக்கப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பாகக் கவனிக்கத்தக்கது. எவ்வளவு காலத்திற்குத்தான் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவ அரசால் தன்னால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களது சீரான சிவில் வாழ்க்கைக்கு இடமளித்திட முடியும்? அனேகமான வழக்குகள் தனது அரச படையின் அடாவடித்தனத்தை அம்பலப்படுத்துவதாயும் அதன்மூலம் படையினருக்கு தண்டனை வழங்க வேண்டியும் வருகையில் அரசு நேரடியாக தனது இராணுவ நலன்களின் பக்கம் சார்கிறது. அத்துடன் தனது இன அழிப்பு நடவடிக்கையை அதன் உச்ச பட்சத்தில் பயன்படுத்துவதற்கு அரசுக்கு தன்னால் முன்னெடுக்கப்படும் சிவில் நிர்வாகமும் சட்ட ஒழுங்கும் நீதிமன்றங்களுமே தடையாயுள்ளன. தனது நீதிமன்றத்தில் தன்னைத்தானே குற்றவாளியாக்கிக் கொள்ள எந்த ஆக்கிரமிப்பு அரசாவது விரும்புமா? எனவே அது தற்போது தனது சட்ட முகமூடியை ஒருபுறம் கழற்றி வைத்துவிட்டு இராணுவ சுயரூபத்தை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது. இன்று தமிழீழத்தில் அட்டுழியகரமான இராணுவ ஆட்சியை சந்திரிகா கட்டவிழ்த்து விட்டுள்ளார். அம்பலமாகிடும் இராணுவக்குற்றங்கள் கூட விசாரணைக்கெடுக்கப்படாமல் திட்டமிட்டு கைவிடப்படுகின்றன. - சிறிலங்காவில் முந்தைய அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களது புதைகுழிகளைத் தோண்டியும், குற்றவாளிகளுக்கு விசாரணைக் கமிஷன்கள் போட்டு பகிரங்க நீதிவிசாரணைகளை நடத்தியும் சிங்கள மக்கள் மத்தியில் நல்லபிப்பிராயத்தைத் தேடிக்கொண்ட சந்திரிகா அரசு, செம்மணி புதைகுழி விசாரணையை அப்படியே கிடப்பில் போட்டுள்ளது. செம்மணி விவகாரத்தை விசாரிக்கத் தொடங்கினால் இன்னும் பல புதைகுழிகள் பற்றிய இரகசியம் அம்பலத்திற்கு வரும் எனும் அச்சமும் அரசுக்குண்டு. - திருகோணமலை கோணேஸ்வரி, மன்னார் ஐடா காமலிற்றா , புங்குடு தீவு கர்ப்பிணிப் பெண் சாரதாம்பாள் ஆகியோர் மீதான கூட்டு வண்புணர்ச்சி

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிலங்கா அரசுத் தலைவர்: ஒரு அதியுயர் இராணுவ இலக்கு!

அண்மையில் சிறீலங்கா அரசு தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை தாக்குதல் குறித்து வேறுபட்ட உணர்வலைகள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றில், இத்தாக்குதலானது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசுத் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான முயற்சி என்ற கருத்தும் தனிநபர்களை கொலை செய்வதன் மூலம் தமிழ் மக்களின உரிமகளை பெற முடியாது என்ற வாதமும் அகக்றைக்குட்படுத்தப்பட வேண்டியவையாகும்.

இங்கு முதலாவதாக குறிக்கப்பட்டுள்ள கருத்து சிறீலங்கா அரசு தலைவர், மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு அரசியல் தலைவர் என்ற அம்சத்திலேயே முழுக் கவனத்தையும் குவிக்கின்றது. அவர் அரசியல் தலைவராக இருக்கின்ற அதேநேரத்தில், முப்படைகளின் தலைவராகவும் இருக்கின்றார் என்ற உண்மை முற்றாக மறக்கப்பட்டுள்ளது, அல்லது மறைக்கப்பட்டுள்ளது.

நாம் இந்த உண்மையிலிருந்து தொடங்குவோம். சிறீலங்கா அரசுத் தலைவரே முப்படைகளின் தலைவராகவும் தனது படைகளுக்கு கட்டளையிடுபவராகவும் இருக்கிறார் என்ற எதார்த்தமானது, அவரின் பாத்திரத்தை தனிக் குறிப்பானதாக மாற்றுகின்றது. ஒருபுறம் நமது தேசத்தை பொறுத்தவரை, சிறீலங்கா படைகளினால் நமது மண்ணில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அத்தனை அட்டுழியங்களுக்கும் மிலேச்சத்தனங்களுக்கும் பதில் சொல்ல வேண்டியவராகவும் பொறுப்பேற்க வேண்டியவராகவும் சிறீலங்கா அரசு தலைவர் உள்ளார். அதேநேரத்தில், தீவிரமான யுத்தம் இடம்பெறுகின்ற நிலையில், சிறீலங்கா படைகளின் அதியுயர் தலைவர் என்றவகையில், இராணுவ இலக்காக ஆக்கப்பட கூடிய நிலையில் அவர் இருக்கிறார். ஒரு யுத்த சூழலில் முப்படைகளின் தலைவரை விட, அதியுயர்ந்த இராணுவ இலக்கு வேறு எதுவும் இருக்க முடியாது என்பது மிகச் சாதாரண உண்மை.

ஒரு கொடிய ஆக்கிரமிப்பு யுத்தம் நம்மீது திணிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், நமது மக்களின் ரத்தமும் சதையும் ஈவிரக்கமின்றி சிதறடிக்கப்படுகின்ற நிலையில், நமது மக்களின் உடல்கள் இராணுவ இலக்காக்கப்பட்டு கிழித்து வீசப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழலில், இதற்கு காரணமாக அமைந்திருக்கின்ற சிறீலங்கா படைகளின் தலைவரின் உடல் இராணுவ இலக்காக்கப்படுவதில் என்ன தவறு இருக்கின்றது? சிறீலங்கா அரசு தலைவரை போர்த்தியிருக்கின்ற அரசியல் ஆடைகள் அகற்றப்படுமாயின், அவரில் உள்ளடங்கியுள்ள கோர இராணுவத் தோற்றம் அப்பட்டமாக வெளிப்படும். அப்போது கிளன்ஸி பெர்ணான்டோவும் டென்ஸில்கொப்பேகடுவவும்பிரேமதாசவும் சந்திரிகாவும்ஒரே தோற்றத்தை கொண்டிருப்பது தெளிவாக புலப்படும்.

புரட்சிகர நீதி என்ற அர்த்தத்தில் பார்ப்போமாயின், நமது தேசத்தின் சார்பில் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டியவராக இன்றைய சிறீலங்காவின் அரசு தலைவர் இருக்கின்றார். செம்மணியில் புதைக்கப்பட்டுள்ள நமது மக்களின் பேராலும், பட்டினியினாலும் நோயினாலும் குண்டுகளினாலும் தமது உயிர்களை இழந்து கொண்டிருக்கின்ற நமது மக்களின் பெயராலும் அழிக்கப்படுகின்ற நமது வளங்களின் பெயராலும் வணக்கத்தலங்களின் பெயராலும் பறிக்கப்பட்டுள்ள நமது இறைமையின் பெயராலும் அவர் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டியவராக உள்ளார்.



தனிநபர்களை கொல்வதன்மூலம் எந்தவொரு சமூகப் பிரிவும் அல்லது தேசமும் தனது விடுதலையை அடைந்து கொண்டதில்லை என்பதை வரலாறு திரும்ப திரும்ப நிரூபித்துள்ளது. அரசியல் போராட்டத்தில் இந்த முடிவு ஒரு விதியாகவே நிறுவப்பட்டு விட்டது. எனவே தனிநபர் கொலைகள் மூலம் தனது அரசியல் இலக்கை அடைந்து விடலாம் என்று முயற்சிக்கின்ற ஒரு அரசியல் அமைப்பானது, அதன் மூலம் தனது அரசியல் அறியாமையையே வெளிப்படுத்துகின்றது என்ற முடிவுக்கு ஒருவர் வர முடியும்.

எனினும் அந்த விதியை அர்த்தப்படுத்துவதில் நாம் அவதானமாக இருப்பதும் அவசியம். ஏனெனில் இதை நீட்டிச் செல்வதன் மூலம் அனைத்து வன்முறை நடவடிக்கைகளையும் நிராகரிக்கின்ற முடிவுக்கு ஒருவர் வரமுடியும். தனிநபர் மீதான வன்முறை தாக்குதல்கள் மூலம் அரசியல் இலக்கை அடைந்து விட முடியாதுஎன்ற உண்மையைபுரிந்து கொள்வது போன்றே, அரசியல் இலக்கை நோக்கிய போராட்டத்தில், தனிநபர்கள் மீதான வன்முறை தாக்குதல்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தையும்புரிந்து கொள்வது அவசியம். அரசியல் போராட்டமானது ஆயுதப் போராட்ட வடிவத்திலும் முன்னெடுக்கப்படுகின்றபோது, எம்மக்களின் மீதான போர்க்குற்றங்களுக்கு காரணமான எதிரி முகாமைச் சேர்ந்த தனிநபர்கள் மீது அந்தந்தக் கணத்திலேயே வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறை தாக்குதல்கள் குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட அர்த்தத்தில் அரசியல் போராட்டத்திற்கு வலுவூட்டுகின்றன, அரசியல் இலக்கை அடைந்து கொள்வதில் உந்தித் தள்ளும் ஊக்கிகளாக செயற்படுகின்றன.

இவ்வாறு வாதிடுவதானது, வன்முறை கலாச்சாரத்தை ஆதரிப்பதாகவோ, வன்முறைகளின் விளைவில் தற்திருப்தி கொள்வதாகவோ அர்த்தப்பட மாட்டாது. கொடிய யுத்தத்திற்குள் திணிக்கப்பட்டிருப்பவர்கள் என்றவகையில், வன்முறைக்கு எதிராகவும், சமாதானச் சூழலுக்குமான உரத்த குரல் நமது தேசத்திலிருந்துதான் ஒலிக்கின்றது. சமாதானத்தை உண்மையாக நேசிப்பவர்களாகவும், அதன் நேர்மையான ஆதரவாளர்களாகவும் நமது மக்களே விளங்குகின்றார்கள்.

எனினும் சிறீலங்கா அரசு பல ஆயிரக்கணக்கான படையினரை நமது மண்ணில் குவித்துக் கொண்டு, நமது மக்களின் சமாதானத்திற்கான ஆர்வத்தை முற்றாக நிராகரித்து வருகின்றது. யுத்த கருவிகளின் கோரச் சக்கரங்களில் நமது மக்களின் சமாதான ஆன்மாவை நசுக்கி வருகின்றது.

இத்தகையநிலைநீடிக்கும்வரை, நமது தேசத்தின் மீது சிறீலங்கா படையின் ஆக்கிரமிப்பு தொடரும்வரை அப்படைகளின் தலைவர் இராணுவ இலக்காக்கப்படுவது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, இராணுவ அர்த்தத்தில் அவசியமானதும் கூட. யுத்த சூழலில், ஒரு சாதாரண படையினர் கொல்லப்படுவது என்பது இராணுவ ரீதியல் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ, அதைவிட பலமடங்கு முக்கியத்துவத்தை, அப்படைகளின் தலைவர் கொல்லப்படுவது பெறுகின்றது. எதிரியை பலவீனப்படுத்துவதிலும் நமது மக்களினதும் போராளிகளினதும் விடுதலை உணர்வை வலிமையாக்குவதிலும் இத்தகைய வன்முறை தாக்குதல்கள் வகிக்கின்ற பாத்திரத்தை யாராவது நிராகரிக்க முடியுமா?

## சிறிலங்கா

(2ஆம்பக்கத்தொடர்ச்சி...)

படுகொலை யாவும் சர்வதேச அளவில் அம்பலமாகியுள்ள நிலையிலும் முப்படைகளின் தளபதியும் அரசுத்தலைவருமாயிருக்கும் பெண் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள முயலாமல் இருந்து வருவது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. இவை வெளித் தெரியவந்த குற்றங்கள். இது போல் எமது சகோதரிகளுக் கெதிரான அரச படைகளின் எத்தனை குற்றங்கள் வெளிப்படுத்தப்படாமல் அமிழ்ந்து போய்க்கிடக்கின்றன. - பாடசாலை மாணவர்களை அரச படைகள் தான்தோன்றித் தனமாக கைது செய்கின்றன. மாணவர்களை கைது செய்வதில்லை எனும் அரச உறுதிமொழியை படைகள் பகிரங்கமாகவே மீறுகின்றன. - அண்மையில் தென் தமிழீழத்தில் இரு இளைஞர்களை கொலைவெறிப்படைகள் சுட்டுக் கொன்றன. இதில் அரசு மௌனமாயிருந்துவிட்டது.- களுத்துறைச் சிறைச்சாலை படுகொலைகள் மற்றும் தொடர் தாக்குதல்களின் போது அரசுதரப்பில் எந்தத் தலையீடும் நடைபெறவில்லை. - வட தமிழீழத்தில் “பாதைகளைத் திறந்து போக்குவரத்தை சீர்செய்து சிவில்வாழ்க்கையை மீளக் கட்டியமைப்பதற்காக” யுத்தத்தை முனைப்பாக்கும் அரசு தென் தமிழீழத்தில் பாஸ்முறையைப் போட்டு மக்களின் போக்குவரத்தை தடை செய்கிறது. இது அரசு கூறும் சட்ட ஒழுங்கிற்கு நேரெதிரான காரியமாகும்.- தமிழ்க்கிராமங்களில் கொலைவெறிப் படைகள் மேற்கொண்டுவரும் அட்டகாசங்களுக்கு கட்டுப்பாடுகளே கிடையாது. இவையாவும் “சட்ட ஒழுங்கைப் பேணும் அரசு” எனும் நிலையிலிருந்து பகிரங்கமாகவே சந்திரிகா அரசு திட்ட வட்டமாக விலகிச் செல்வதையேக் காட்டுகிறது. வெளிப்படையாகவே எந்தத் தயக்கமுமின்றி தான் இன அழிப்பு அரசுதான் என்பதை தானே முன்வந்து வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. உலகில் எந்த சட்ட ஒழுங்கையும், சர்வதேச விதிகளையும் இனி, சந்திரிகா அரசு சட்டைசெய்யப் போவதில்லை. எமது எதிரி தனது ஆக்கிரமிப்பு சுயரூபத்தை வெட்கமின்றி வெளிப்படுத்துகையில் நாம் மாத்திரம் ஏன் நமது ஒன்று திரண்ட எதிர்ப்பை உச்சபட்சத்தில் பகிரங்கப்படுத்துவதற்கு தயங்க வேண்டும்? சிறிலங்கா அரசுக்கு தமிழீழத்தில் எந்த வேலையுமில்லை என்பதை நாம் ஒருமித்த குரலில் உரத்து முழங்கிடுவோம். சிறிலங்கா அரசின் சட்ட ஒழுங்கு பேணலும், சிவில் நிர்வாகமும், நீதிமன்றங்களும் தமிழீழத்தின் இறைமையை தொடர்ந்தும் நசுக்குவதற்கும் அதன் ஆக்கிரமிப்பை தக்கவைப்பதற்கும் துணைபோகும் காரணிகள் என்பதையும் நாம் அம்பலப்படுத்திடுவோம். எமக்கான சிவில் வாழ்க்கையையும், சட்ட ஒழுங்கையும் சுதந்திர தமிழீழத்தில் மிகச் சிறப்பாக எம்மால் கொண்டுநடத்த முடியும் என்பதையும் உலகுக்கு நிரூபிப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழின அழிப்பு : சிங்கள அரசின் புதுப் பரிமாணம்!

நமக்கு முன்னே கடினமான காலகட்டம் ஒன்று தென்படுகின்றது. நமது நீண்ட வரலாற்றில் மிக கடுமையானதும் கோழைத்தனமிக்கதுமான அடக்குமுறையை எதிர்கொள்ள வேண்டிய ஓர் கட்டத்தின் விளிம்பில் நாம் நிற்கிறோம். இன்று சிறீலங்கா அரசு நம்மீது பகிரங்க போர் பிரகடனம் செய்திருக்கின்றது. விதிவிலக்கின்றி நமது மக்கள் அனைவரையும் தனது எதிரியாக அது அறிவித்து விட்டது. மனித முகம், ஜனநாயக மரபு போன்ற போலி வேடங்களை களைந்து விட்டு, பச்சையான பேரினவாத தோற்றத்துடன் அது செயற்பட ஆரம்பித்து விட்டது.

சிங்கள தேசத்திற்குள்ளும் சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து நாம் கவனமாக மதிப்பிட வேண்டும். பொருளாதார மற்றும் சர்வதேச அழுத்தங்களையும் மீறி, சிறீலங்கா அரசு நம்மீதான யுத்தத்தை தீவிரமாக முன்னெடுக்க தயாராகி விட்டது என்ற எதார்த்தத்தை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். இதுவரை காலமாக அது பின்பற்றி வந்த இருமுகத்தன்மை கொண்ட இனவாத, யுத்த அணுகுமுறைகளிலிருந்து பகிரங்கமான பாசிச செயற்பாடுகளை நோக்கி நகர்ந்துள்ளது என்ற உண்மையை புரிந்து கொள்வது நமது தற்காப்பிற்கும் விடுதலைக்கும் அவசியமானது.

சிறீலங்கா அரசின் இனவாதப் பண்பு என்பது, அதனுடன் தற்செயலாக இணைக்கப்பட்ட ஒரு அம்சம் அல்ல. மாறாக, இனவாதம் என்பது சிறீலங்கா அரசின் பிறப்பிலிருந்தே அதனுடன் கலந்து விட்டது. இன்னும் துல்லியமாக பரிசீலிப்போமாயின், சிங்கள தேசத்தின் கருப்பைக்குள் உருவாகும்போதே, சிறீலங்கா அரசு இனவாத கவசத்தால் போர்த்தப்பட்டிருந்தது என்பதையும் சிங்களதேசத்துடன் அது இனவாத தொப்புள் கொடியின் மூலமே பிணைக்கப்பட்டிருந்தது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சிங்கள மக்கள் இனவாத சித்தாந்தத்தினூடாகவே ஒரு தேசமாக ஒன்றிணைக்கப்பட்டார்கள். இலங்கை முஸ்லீம்களையும் மலையக தமிழர்களையும் ஈழத் தமிழர்களையும் எதிரிகளாக சித்தரித்து, அவர்களின் ஆதிக்கத்திலிருந்து தம்மை பாதுகாக்க வேண்டும் என்று அச்சமூட்டப்படவர்களாகவே சிங்களமக்கள் ஒரே தேசமாக இணைக்கப்பட்டார்கள். இவ்வாறு இனவாத ரத்தமும் உடலும் கொண்ட சிங்களதேசத்திலிருந்து உருவான சிறீலங்கா அரசு, அதன் பிறப்பிலிருந்தே இனவாதப் பண்புளை மரபாகப் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த இனவாதக் குழந்தைதான் இன்று ஆக்கிரமிப்புப் பண்பும் யுத்தவெறியும் கொண்ட அரக்கனாத வளர்ச்சியடைந்துள்ளது.

சிறீலங்கா அரசை, சிங்களதேசத்தின் இனவாதக் குழந்தையாக புரிந்து கொண்டால் மட்டுமே, இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களை அடக்குவதிலும் ஆக்கிரமிப்பதிலும் சிங்களதேசத்திற்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே நிலவுகின்ற இசைவை புரிந்து கொள்ள முடியும், சிறீலங்கா அரசுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களும் சகல அரசியல் கட்சிகளும் இனவாத சகதிக்குள் தோய்ந்திருப்பதை விளக்க முடியும். சிங்களதேசத்திற்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே நிலவுகின்ற இத்தகைய இனவாத உறவுதான், சிங்கள தேசத்தின் மத்தியில் இனவாத உணர்வுகள் வலிமை பெறுகின்றபோது, அது சிறீலங்கா அரசில் அப்பட்டமாக பிரதிபலிப்பதற்கும், மறுதலையாக, சிறீலங்கா அரசு முன்னெடுக்கின்ற அத்தனை இனவாத அடக்குமுறைகளையும் சிங்களதேசம் தயக்கமின்றி ஆதரிப்பதற்கும் காரணமாகின்றது.

சிங்களதேசத்தின் ஒரு நூற்றாண்டுகால இனவாத வரலாற்றின் உச்சக் கட்டம் இப்போது தொடங்கப்பட்டிருக்கின்றது. தனது ஆதிக்கத்திற்கு எதிராக கிளர்ந்துள்ள நமது மக்கள்மீது, தேசம் தழுவிய யுத்தத்தை நடத்துவதற்கு சிங்கள அரசு தயாராகி விட்டது. நமது மக்கள் மீது ஒரு முழுமையான யுத்தத்தை நடத்துவதற்கான முயற்சிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன. இதுவரை காலமும் நமது மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தனது யுத்தத்தை, "விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான யுத்தம்" என்று கேவலமாகச் பிரச்சாரப்படுத்தி வந்த சிங்கள அரசு இப்போது தெட்டத்தெளிவாக முழுத்தமிழ் மக்களுக்கும் எதிரான யுத்தம் என்று பிரகடனப்படுத்தி விட்டது. இந்த யுத்த முனைப்பில் சிங்களதேசமும் சிறீலங்கா அரசும் எவ்வாறு ஒன்றிணைந்து நிற்கின்றன என்பதை புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

**பாசிச பண்பு நோக்கி சிங்களதேசம்:**

இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற கருத்து நீண்ட காலத்திற்கு முன்பே சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு விட்டது. உலகில் சிங்கள மக்களுக்கு இந்த நாடு மட்டுமே உண்டு என்ற கருத்து முழுப்பலத்துடன் பரப்பப்பட்டு, அவர்கள் மத்தியில் உளவியல் அச்சம் வேரூன்றப்பட்டு விட்டது. மேலும் இந்த நாட்டிலுள்ள ஏனைய சமூகங்கள் வற்தேறு குடிகள் என்றும், அவர்கள் சிங்கள மக்களை சுரண்டி, ஆக்கிரமிக்க முயற்சிக்கிறார்கள் என்றும் வலிமையான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றின் விளைவாக இங்குள்ள ஏனைய சமூகங்கள் தொடர்பாக, சிங்கள மக்கள் மத்தியில் கடுமையான பகையும் வெறுப்பும் நிலைபெற்றுள்ளன. அன்றைய அநகாரிக தர்மபாலவிலிருந்து, இன்றைய சம்பிக ரணவக்க வரை இக்கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. காலம் கழிவதும் திரிக்கப்பட்ட வரலாறும் திட்டமிட்ட புனைவுகளும் சேர்ந்து, இந்நாடு தொடர்பான முற்றிலும் வேறான படிமம் ஒன்றை சிங்கள மக்கள் மத்தியில் பதித்து விட்டன. ஐரோப்பியர் வருகைக்கு முன்பு, இந்த நாட்டில் தமிழர்களும் தமிழ் அரசுகளும் இருந்திருக்கின்றன என்ற உண்மையை, சிங்கள பாடசாலை ஆசிரியர்கள் கூட அறிந்திராத அளவுக்கு இந்த படிமம் அவர்களிடையே ஆழப்பதிந்து விட்டது.

இவ்வித உளவியல் அச்சமும் இனப்பகைமையும் வெறுப்பும் அறியாமையும் சேர்ந்து, இங்குள்ள ஏனைய சமூகங்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள், அகற்றப்பட வேண்டியவர்கள் என்ற கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் நிலைபெறுவதற்கு காரணமாகியுள்ளன. இது ஒரு அபாயகரமான அறிகுறி. இத்தகைய நிலை, தனது வெறுப்புக்குரிய சமூகத்திற்கு ஏற்பட கூடிய எத்தகைய அழிவுகளையும் துயரங்களையும் சரியென ஏற்றுக் கொள்கின்ற மனநிலையை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியிருக்கின்றது, அவற்றில் மகிழ்ச்சியும் தற்திருப்தியும் கொள்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. பாசிச முன்னெடுப்புகளை வரவேற்பதற்கும் தாமே பாசிச உணர்வுடன் செயற்படுவதற்குமான தொடக்கப் புள்ளி இங்குதான் உள்ளது.

இவ்வாறு, சிங்கள தேசத்தின் மத்தியில் பாசிச பண்புகள் நோக்கிய நகர்வு படிப்படியாகவும் உறுதியாகவும் இடம்பெற்று வருகின்றது. அவர்கள் மத்தியில் சிறீலங்கா அரசு சார்ந்தும் வெகுஜன அளவிலும் இடம்பெற்று வருகின்ற பல்வேறு இயக்கங்கள் இத்தகைய பாசிச பண்பு நோக்கிய நகர்வை துரித்படுத்துவதாகவும் வலுப்படுத்துவதாகவுமே அமைந்திருக்கின்றன. நமது மக்கள் மீது சிறீலங்கா அரசு தொடுத்துள்ள யுத்தத்திற்கு சிங்களமக்கள் அளித்து வருகின்ற முழுமையான ஆதரவு என்பது, பாசிச பண்பு நோக்கிய அவர்களின் நகர்வின் தெளிவான அடையாளமாக இருக்கின்றது.

இன்று சிங்கள மக்களிடையே தேசிய அரசாங்கம் என்ற கோரிக்கை அழுத்தமாக வற்புறுத்தப்பட்டு வருகின்றது. தேசிய அரசாங்கம் என்ற கருத்தாக்கம் சிறீலங்கா அரசியலில் உரையாடப்படுவது இதுவே முதல் தடவை அல்ல. இக்கருத்து ஏற்கனவே ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பிரச்சாரப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒருபுறம், ஆட்சியிலுள்ள ஒரு கட்சி பலமாக இருக்கின்ற போது, அது எதிர்க்கட்சியை பலவீனப்படுத்துவதற்காக இக்கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது. இது முற்றிலும் கட்சி நலன் சார்ந்த வெளிப்பாடாக அமைகின்றது. மறுபுறம், நமது மக்களின் போராட்டம் வலுப்படும்போது தேசிய அரசாங்கம் பற்றிய கருத்து சிங்கள மக்களிடையே முக்கியத்துவம் பெற்று வந்திருக்கின்றது. இது கட்சி நலன்களுக்கு அப்பால், நமது போராட்டத்தை முறியடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் வெளிப்பட்டிருக்கின்றது. எனினும் கடந்த காலங்களில் தேசிய அரசாங்கத்திற்கான கோரிக்கையானது, மாறிக் கொண்டிருந்த அரசியல் சூழலினால் அதிக முக்கியத்துவத்தை பெறவில்லை.

ஆனால் இம்முறை சந்திரிகா தனது தேர்தல் வெற்றிக்கு பின்னர், தேசிய அரசாங்கம் குறித்த முன்வைத்த கோரிக்கை, சிங்கள மக்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. வன்னிப் போர் முனையில் விடுதலை புலிகள் அடைந்த மாபெரும் வெற்றிகளும் சந்திரிகா மீதான வெடிகுண்டுத் தாக்குதலும் சிங்கள தேசத்தின் மத்தியில் அச்சத்தையும் வன்மத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன. யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமாயின் முழுச் சிங்களதேசமும் ஓரணியில் நிற்க வேண்டும் என்ற உணர்வலைகள் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியுள்ளன. இத்தகைய உணர்வுகளை சரியாக பிரதிபலித்ததன் மூலம் சந்திரிகாவின் கோரிக்கையானது சிங்கள தேசத்தின் வெகுஜன தளத்தில் பெரும் ஆதரவைப் பெற்றுள்ளது.

பௌத்த மதபீடங்களும் நிறுவனங்களும் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று கடுமையாக வலியுறுத்துகின்றன. சிங்கள மக்கள் கட்சி ரீதியில் பிரிந்திருப்பதை கைவிட்டு, தேசிய நலன்களை காப்பதற்காக ஒன்றிணைய வேண்டும் என இவை நீண்ட காலமாகவே கோரி வந்திருக்கின்றன. இப்போது வன்னியில் சிங்களப் படைகளுக்கு ஏற்பட்டுள்ள தோல்வியும் சிங்கள மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற உணர்வுகளும் பௌத்த நிறுவனங்களின் கோரிக்கையை பலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. சகல சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் தேசிய அரசாங்கத்தின் அவசியம் குறித்து எழுதியுள்ளன, சிறீலங்கா அரசியலில் புதிய ஒளிக்கீற்று தென்படுவதாக அவை குறிப்பிட்டுள்ளன. இவ்வாறு, இம்முறை தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையானது நிறுவனமயப்பட்ட வடிவத்திலும் சிங்கள மக்களின் உணர்வுகளுடன் இசைந்ததாகவும் வெளிப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு இக்கோரிக்கை பெற்றுள்ள வலிமையான பின்புலத்தின் காரணமாகத்தான், அரசியல்சாசன திருத்தத்திற்கு தான் தயக்கத்துடனாவது ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாக ரணில் முடிவு செய்யும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஒரே அரசாங்கத்தில் இரண்டு பிரதான சிங்கள கட்சிகளும் இணைவது சாத்தியமா என்ற கேள்-

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

www.tamilarangam.net

# குருதிக் கறைகள் காயுமுன்னே...!

15000 புதியவர்களை மார்ச் 15 இற்கு முன்பு, சிங்கள படையில் சேர்த்துக்கொள்வதற்கான ஆயத்தங்களை சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ளது. இந்த புதியபடையினர் மூன்று மாத அவசர பயிற்சிகளை கொடுத்து நம்மீது விரைவில் ஏவிவிடப்படவுள்ளனர். அவர்களின் உள உடல் அழுத்தங்களுக்கெல்லாம் நாம் பலியாக்கப்படவுள்ளோம். உண்மையில் அரசு பசப்புவது போல, அரசியல் தீர்வு எட்டப்படுமாயின் தற்போது இருக்கின்ற ஆயிரக்கணக்கான படையினர் விலக்கப்பட்டு, அவர்களுக்கு வேறு வருமான வாய்ப்புகள் தரப்படுவது பற்றிய திட்டங்கள் அவசியப்படும் ஒரு நிலையில் புதிதாக படையின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் நோக்கம் நம்மால் புரிந்து கொள்ளத்தக்கதே.

இவ்வாறாக அண்மைக்காலங்களில் அவசர அவசரமாக படைகளில் சேர்க்கப்பட்டவர்களில் 2000 பேர் மீது கொலை, கொள்ளை, மோசடி குற்றங்களில் ஈடுபட்டதாக, அவர்கள் பகுதிகளில் பதிவாகியுள்ளன என்றால், நமது தேசத்தில் இவர்கள் நிகழ்த்தியிருக்கும், நிகழ்த்தப்போகும் அட்டுழியங்கள் பன்மடங்கு என்பதை சொல்லத் தேவையில்லை.

உயர் வெடித்திறன் கொண்டதும், பாரிய அழிவுகளை ஏற்படுத்தவல்லதுமான வெடிமருந்துகள் அரசினால் மிகவிரைவில் வாங்கப்படவுள்ளன. பல கோடி பெறுமதியான பெல் 415 வகை 3 புதிய இலகு வான்ஊர்திகளை கொள்முதல் செய்யும் ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டது. பல இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதி மிக்க ராடர் கருவிகளும் தயாராகின்றது. இவை யாவும் வான் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும். எனவே வாழ்விடம் விட்டு



அகற்றப்பட்டு கோவில்களிலும் முகாம்களிலும் வதியும் நம் மக்கள் சிறிலங்கா அரசு விமானங்களின் குண்டுத்தாக்குதல்களுக்கு மறுபடியும் இலக்காக்கப்படவுள்ளனர். பல கோடி ரூபாய் பெறுமதியான தாக்குதல் படகுகளும் பீரங்கிகளும் வாங்கப்பட்டு, நமது பல கடற்கரை கிராமங்களையும் மீனவ மக்களையும் அவர்களின் மீன்பிடி படகுகளையும் இலக்காக்கும் விதத்தில் நகர்வுகள் வேகமாக நடைபெறுகின்றன. இவை அனைத்தும் ஏற்கனவே அவர்கள் உருவாக்கியிருந்த இராணுவ திட்டமிடல், நிதி ஒதுக்கீடுகளின் பெறுபேறுகளாகும்.

இந்த வகையில், இன்னும் பல செம்மணிகளுக்கும் அரசு அத்திவாரமிடுகின்றது. ஏற்கனவே நடைபெற்று வரும் செம்மணி புதைகுழி விசாரணைகளை அரசு தரப்பு திட்டமிட்டு முடக்கி வைத்துள்ளது. இதன் மூலம் இராணுவத்தின் கொலைவெறியை அரசு ஊக்கப்படுத்துகின்றது. யாழ்பாணத்தில் மாணவர்கள் கைது மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விட்டுக்கொடாத மாணவர்களின் ஒருமித்த போராட்டங்கள் இராணுவத்தின் அடாவடித்தனங்களை மட்டுப்படுத்தியுள்ள போதிலும், இதில் நாம் அசட்டையாக இருந்து விடக்கூடாது. விடுதலைப்போராட்டத்தில் மக்களின் நேரடி பங்குபற்றுதல் இல்லை என காட்டுவதற்காக இப்படிப்பட்ட, மாணவர்கள் மற்றும் வெகுசனப்போராட்டங்கள் நடைபெறவிடாமல் அரசு முளையிலேயே கிள்ள எத்தகைய கொடிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதை மறந்துவிடக்கூடாது. தற்காலிகமாக அவர்கள் காட்டும் ஒருசில சலுகைகள் யாவும் நம்மை நீண்டகாலத்தில் அடிமைகளாக்குவதற்கு போடப்படும் தூண்டில் இரைகள் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

கொழும்பு நகரின் மையப்பகுதியில் மட்டும் நடைபெற்று வந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகள் சிறிலங்காவின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தமிழர் வேட்டையாக மாற்றப்பட்டுள்ளது. தமிழீழத்திலுள்ள ஒவ்வொரு நகரமும் துருவித் தேடப்படுகின்றன. வீட்டுக்கு வீடு பதிவு அட்டைகளும், இராணுவ ஆளடையாள அட்டைகளும் திணிக்கப்படுகின்றன. வட தமிழீழத்திலிருந்து சிறிலங்காவிற்கு வருதற்கு அமுலாக்கப்பட்டு வந்த கடுமையான பாஸ் நடைமுறைகள் தற்போது தென்தமிழீழத்திற்கும் விரிவாக்கப்பட்டுள்ளன. முழுஅளவில் தமிழ் தேசத்தை கூட்டாக தண்டிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகள் இவையாகும்.

அனைத்து வழிமுறைகளிலும் நமது மக்களின் குரல்வளைகளை நெறித்து விடும்படி அரசு தனது வன்முறை யந்திரங்களுக்கு ஆணை பிறப்பித்துவிட்டது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# நிபந்தனைகளின் அரசியல் !

சிறீலங்காவின் அரசியல் தளத்தில், நமது தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக மீண்டும் ஒரு சலசலப்பு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தை என்றும் சமாதானப் பொதியை நடைமுறைப்படுத்தல் என்றும் செய்திகள் வெளியாகின்றன. நோர்வே மற்றும் கனடா நாட்டு அதிகாரிகள் கொழும்புக்கு விஜயம் செய்திருக்கின்றார்கள். ஒரு அரசியல் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குவதற்கு ஒத்துழைக்க இந்நாடுகள் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இத்தயை சூழலில், அரசியல் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறுமாயின், அப்போது நாம் முன்வைக்கக் கூடிய நிபந்தனைகள் குறித்து, ஒரு புரிதலை பெறுவது அவசியமானது.

ஒரு அரசியல் பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றபோது, அதில் பங்குபற்றுகின்ற, முரண்பட்ட தரப்புகளினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகள் என்பவை, அப்பிரிவினர் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களது அரசியல் அபிலாஷைகளின் திரட்டப்பட்ட சாரமாக அமைகின்றன. தீவிர முரண்பாடுகளுடன், தீர்க்கமான இலக்கு நோக்கிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரிவினரிடையே, அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, அவர்களினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகள், அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களினுடைய அரசியல் கோரிக்கைகளின் கூரிய கீற்றுக்களாக விளங்குகின்றன. தாம் எத்தகைய அரசியல் இலக்கை கொண்டிருக்கிறார்களோ, அத்தகைய இலக்கின் துல்லியமான கட்டியங்களாக இத்தகைய நிபந்தனைகள் அமைகின்றன.

ஒரு தேசிய விடுதலைப் போராட்ட சூழலில் நிபந்தனைகள் என்பது, உணர்ச்சிமிக்க விடயமாக அமைகின்றது. முற்றிலும் முரண்பட்டும் ஒருவருக்கொருவர் எதிராக கடுமையாக போராடிக் கொண்டுமிருக்கின்ற இரு வேறுபட்ட தேசங்களின் பிரதிநிதிகளுக்கிடையேயான அரசியல் பேச்சுவார்த்தைகளின் பண்பை நிர்ணயிக்கின்ற ஒழுங்காக்கிகளாக, அவர்களினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகள் மாறுகின்றன. இத்தகைய சூழலில் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளை ஆழ்ந்து பரிசீலிக்கும்போது, அந்நிபந்தனைகள் போராடுகின்ற தேசங்களினது முரண்பட்ட அரசியல் நோக்கங்களின் சாரமாக அமைவதை நிறுவ முடியும்.

நிபந்தனைகளில் உள்ளடங்கியுள்ள அரசியல் அம்சமானது, நமது தேசிய விடுதலை போராட்டச் சூழலில் எவ்வளவு தூரம் அக்கறைக்குட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது? ஒருபுறம் நமது தேசத்தை ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா அரசு, பேச்சுவார்த்தைக்காக எந்தவொரு நிபந்தனையும் நமது தரப்புகளினால் முன்வைக்கப்படுவதை வன்மையாக நிராகரித்து வருகின்றது. மறுபுறம் தமிழ் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் ஊடகத் துறையினரும் அரசியல் பேச்சுவார்த்தைக்காக நிபந்தனைகள் முன்வைக்கப்படுவதை - குறிப்பாக விடுதலை புலிகள் அமைப்பினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளை- தவறான அணுகுமுறைகளாக அர்த்தப்படுத்தி வருகின்றார்கள். கடந்த வருட மாவீரர் தின உரையில் விடுதலை புலிகள் அமைப்பின் தலைவரினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள், வன்னிப் போர்முனையில் அவ்வியக்கத்திற்கு கிடைத்துள்ள வெற்றிப் பெருமிதத்தின் விளைவு என்று இவர்கள் வாதிடுகின்றனர்.

நிபந்தனைகள் முன்வைக்கக் கூடாது என்று சொல்வதே ஒரு நிபந்தனைதான் என்பதை முதலில் புரிந்து கொள்வோம். பேச்சுவார்த்தை என்பதே, அதில் பங்குகொள்கின்ற தரப்புகளினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கிடையிலான ஊடாட்டமே என்றிருக்கும்போது, பேச்சுவார்த்தை தொடங்கு முன்பே, நிபந்தனை விதிக்கக் கூடாது என்று நிபந்தனை விதிப்பது பேச்சுவார்த்தை என்ற செயன்முறையையே மறுப்பதாக அமைந்து விடக் கூடியது.

போராட்டத்தில் ஈடுபடுகின்ற தரப்பினர்களுக்கிடையே மாறிக் கொண்டிருக்கின்ற அதிகாரச் சமபலநிலைக்கும் அவர்களினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்குமிடையே நேரடித் தொடர்பை தேடுவது தவறானது. மாறாக, போராட்டத்தின் அரசியல் இலக்குகளுக்கும் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்குமிடையில் நிலவுகின்ற நேரடி உறவை புரிந்து கொள்வதே சரியான அணுகுமுறையாக இருக்கும்.

முதலில், அரசியல் பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனைகளாக தமிழ்த்தரப்பை நோக்கி - குறிப்பாக விடுதலைப் புலிகளை நோக்கி - சிறீலங்கா அரசு தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்ற இரண்டு நிபந்தனைகளில் கவனத்தை குவிப்போம்: ஒன்று, ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும். இரண்டு, பிரிவினை கோரிக்கையை கைவிட வேண்டும். எமது விடுதலை போராட்டமானது, ஆயுதப் போராட்ட வடிவத்தை பெற்ற கணத்திலிருந்து, இவ்விரு நிபந்தனைகளும் சிங்கள அரசியல் தலைவர்களினாலும், சிறீலங்கா அரசுத் தலைவர்களினாலும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதை நாம் எவ்வாறு புரிந்து கொள்ளப் போகின்றோம்? இந்நிபந்தனைகளின் பின்னாலுள்ள அரசியல் அம்சம் என்ன?

தமிழீழத்தை ஆக்கிரமித்து தனது முப்படைகளினதும் வேட்டைக்களமாக அதை மாற்றியுள்ள சிறீலங்கா அரசு, நமது மக்களின் பிரதான தற்காப்புக் கவசமாகவும் நமது மக்களின் விடுதலைக்குரிய முதன்மையான வழிமுறையாகவும் திகழ்கின்ற ஆயுதப் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது என்பது, நமது மக்கள் மீதான ஆக்கிரமிப்பையும் இன அழிப்பையும் தொடர்ச்சியாக நிலைநாட்டுவதை தவிர வேறு என்ன அரசியல் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது? நமது மக்களை, மண்ணை, வளங்களை ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா அரசு, பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனையாக நமது மக்களின் ஆயுதப் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று கோருவதன் பின்னால் படிந்துள்ள அடக்குமுறை மனோபாவத்தை,

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழின அழிப்பு... (5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கு அப்பால், நமது மக்கள் மீதான ஆதிக்கத்தை தொடர்ந்தும் பேணுவதற்கான கடைசி முயற்சியில் இவ்விரு கட்சிகளும் ஓரணியில் செயற்பட முன்வந்திருக்கின்றன என்பதே நமது அக்கறைக்குரியது. அரசியல்சாசன திருத்தம் என்ற பெயரில், நமது தேசிய அந்தஸ்த்தையும் தேசிய உரிமைகளையும் முற்றாக மறுக்கின்ற ஒரு தீர்வினூடாக, சிங்கள அரசானது சர்வதேச பிற்போக்கு சக்திகளின் ஆதரவுடனும் சிங்கள மக்களின் பூரண பங்குபற்றுதலுடனும் நம்மீதான ஆக்கரமிப்பு யுத்தத்தை புதிய வடிவில், தீவிரமாக முன்னெடுப்பதற்கான சூழல் இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

### யுத்தவெறியின் உச்சத்தில் சந்திரிகா அரசு

தேர்தல் வெற்றிக்கு முன்பே சந்திரிகா அரசு யுத்தத்திற்கான பட்ஜெட்டை தயாரித்து விட்டது. நாட்டின் மொத்த வருமானத்தில் 20வீதத்தை பாதுகாப்பிற்காக ஒதுக்கி, நவீன போர்த் தளபாடங்களுடன் யுத்தத்தை உயர்ந்த மட்டத்தில் நடத்துவதற்காக அது ஏற்கனவே திட்டமிட்டு விட்டது. இப்போது வன்னித் தோல்விக்கும் தன்மீதான வெடிகுண்டு தாக்குதலுக்கும் பின்னர், சந்திரிகா யுத்தத்ததை தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ், தன் சொந்தக் கரங்களின் கீழ் கொண்டு வந்திருக்கின்றார். இதன் முதல் நடவடிக்கையாக, இராணுவ கட்டமைப்பில் தீவிர மாற்றங்களையும் களையெடுப்புகளையும் செய்திருக்கின்றார். தனது யுத்த முன்னெடுப்புகளிலுள்ள பாதகமான அம்சங்களை சுட்டிக் காட்டி வந்த அதிகாரிகளை சிங்கள தேசத்தின் துரோகிகள் என முத்திரை குத்தியதுடன் பதவி நீக்கமும் செய்துள்ளார். இதுவரை காலமும் யுத்தத்தை ஓரளவுக்கு தனது முடிவின்படி முன்னெடுத்து வந்த அனுருத்தவின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி விட்டார். இவ்வாறு, முற்றிலும் தனது நேரடி கட்டுப்பாட்டின் கீழ், தனது சொந்த முடிவின்படி யுத்தத்ததை நடத்துவதற்கான நிறுவன ஒழுங்குகளை சந்திரிகா செய்து முடித்து விட்டார்.

மறுபுறம், சந்திரிகா தான் பொறுப்பெடுத்துள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்தை தன்னிலைப்படுத்துவதிலும் வெற்றி பெற்றுள்ளார். தான் ,பயங்கரவாதத்தின், நேரடித் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டவர் என மக்களிடம் அனுதாபத்தை ஏற்படுத்தி, அதை யுத்தத்திற்கு ஆதரவாக மையப்படுத்துவதில் அவர் எளிதாக வெற்றி பெற்றிருக்கின்றார். தனக்கேற்பட்டுள்ள ஊனத்தை, தமிழ் மக்கள் மீது தான் மேற்கொண்டு வருகின்ற, மேற்கொள்ளவிருக்கின்ற கொடிய இன அழிப்புக்கான நியாயப்படுத்தலாக மாற்றுவதில் அவர் உணர்ச்சிபூர்வமான வெற்றியை பெற்றிருக்கின்றார். மரணத்தை நெருங்கியதால் ஏற்பட்ட ஆவேச அச்சம் அவருள் நிரம்பிக் கிடக்கின்றது, பழிவாங்கும் உணர்ச்சியினால் அவர் உந்தித் தள்ளப்பட்டிருக்கின்றார். முழுத் தமிழ் மக்களையும் தனக்கு எதிரியாக நிறுத்தியிருப்பதன் மூலமும் அவர்களை கடுமையாக எச்சரித்திருப்பதன் மூலமும் தன்னுள் கனன்றுள்ள பழிவாங்கும் உணர்ச்சியை அவர் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். புத்திக் கூர்மைமிக்க சிங்கள மக்கள் தனக்கு வாக்களித்திருப்பதாக தெரிவித்திருப்பதன் மூலம் தான் யாருக்காக செயற்பட போகின்றேன் என்பதை துல்லியமாக சமிக்ஞைப்படுத்தியிருக்கின்றார். இதுவரை நடைபெற்ற சிங்கள அரசுத் தலைவருக்கான தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளின் பலத்தில் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டிருப்பவர் என்பதை சந்திரிகா துல்லியமாக பிரதிபலித்துவருகின்றார். தேர்தல் நேரத்தில் தான் வாக்குறுதி வழங்கிய வட கிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக சபை என்ற விடயத்தை ஒதுக்கித் தள்ளி விட்டார். இவ்வாறு மந்திரக் கதைகளில் வருகின்ற ஒற்றைக்கண் அரக்கனை ஒத்த கொலீரத்துடன், இந்த நவீன ஒற்றைக்கண் யுத்த அரக்கி தமிழ்த்தேசத்தை அழித்தொழிப்பதென்று வெளிப்படையாகவே புறப்பட்டு விட்டார். இதுவரை தான் போர்த்தியிருந்த மனிதாபிமான, ஜனநாயக முகமூடிகளைக் களைந்து விட்டு தனது இனவாத தோற்றத்தை, யுத்த முகத்தை வெளிப்படையாக்கியிருக்கின்றார்.

கடந்த காலங்களில், ,சமாதானத்திற்கான யுத்தம், சமாதான ஊர்தி, ஒரேதேசம், ஒரேநாடு, என்ற பிரச்சாரங்கள் மற்றும் நடவடிக்கைகளின் மூலம், யுத்தமானது சிங்கள மக்கள் மத்தியில்,மறைமுகமான, முறையில் வெகுஜனமயப்படுத்தப்பட்டது. இப்போது ,வீட்டுக்கொரு இராணுவம், என்ற கோஷத்தின் கீழ் யுத்தம் நேரடியாகவே சிங்கள மக்களுடன் இணைக்கப்பட்டு விட்டது. இந்த கோஷம் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகின்றது என்பதல்ல, மாறாக, இது சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்ற தாக்கமே முக்கியமானது. யுத்தத்தை தம்முடையதாக உணரும்படி சிங்கள மக்கள் ஆளாக்கப்படுவதால், யுத்தம் நிச்சயமான வெகுஜன தன்மையை பெறுகின்றது. யுத்தத்தில் பங்கு கொள்வதற்குரிய மனிதவளமும் தார்மீக ஆதரவும் மக்களிடமிருந்து தொடர்ச்சியாக கிடைப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இது மறுபுறத்தே சிங்கள மக்கள் மத்தியில் யுத்தத்திற்கு எதிரான உணர்வு கொண்டவர்களின் குரலையும் செயற்பாடுகளையும் முற்றாகவே ஒதுக்கித் தள்ளி விடுகின்றது. இவ்வாறு ஒரு ஆக்கிரமிப்பு யுத்தமானது வெகுஜனப் பண்பை பெறுவது என்பது, பாசிசத்தை நோக்கிய திட்டவட்டமான, அபாயகரமான நகர்வு என்பது தெளிவாக அடையாளம் காணப்பட வேண்டும்.

இவ்வாறு நம்மீதான ஆக்கிரமிப்பை தொடர்வதில் முழுச் சிங்களதேசமும் சிங்கள அரசும் ஒன்றுபட்டிருப்பதையும் அவை பாசிச பாதையில் அடியெடுத்து வைத்திருப்பதையும் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் எதிர் கொள்ள வேண்டும். நம்மை ஆக்கிரமிப்பதில், அழித்தொழிப்பதில் சிங்கள தேசத்திற்குள் வெகுஜன ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஏற்பட்டிருக்கின்ற ஐக்கியம் எமது அரசியல் உணர்வை தூண்ட வேண்டும், நமது விடுதலை நோக்கி நம்மை மேலும் உறுதியாக அணிதிரட்ட வேண்டும், ஐக்கியப்படுத்த வேண்டும். சிங்கள தேசத்திற்குள் இடம்பெற்று வருகின்ற பாசிச போக்கு குறித்த பரிசீலனை, அதற்கு எதிரான நமது உணர்வையும் ஐக்கியத்தையும் போராட்டத்தையும் மேலும் வலுப்படுத்த வேண்டும், நமது விடுதலையை திட்டமிட்ட ரீதியில் விரைவில் அடைந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்த வேண்டும்.

நாம் ஒரு உண்மையில் தெளிவாக இருப்போம்: நமது விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம். சிங்கள தேசமும் சிங்கள அரசும் முட்டாள்தனமான ஆக்கிரமிப்பு வெறியுடன் நம்மீது யுத்தப் பிரகடனம் செய்திருக்கின்றன. இதை எதிர்த்து நாம் அடைகின்ற வெற்றி, நமது விடுதலையை உலகெங்கும் முரசறையும். இந்த வெற்றி நமது சுதந்திரத்தை ஓங்கி ஒலிக்கும். இத்தகைய வரலாற்று திருப்புமிக்க கட்டத்தில், நமது இறுதி வெற்றிக்கான வழிமுறைகளை காண்பதும் நாம் ஒரேதேசமாக திரண்டெழுவதும் அவசியமாகின்றன. சிங்கள படைகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்துடன், தமிழீழத்திலும் புலம்பெயர்ந்தும் வாழ்கின்ற நமது மக்களின் வெகுஜன போராட்டங்களும் நமது விடுதலைக்கு அவசியம் என்பதை புரிந்து கொள்வோம்.

## நிபந்தனைகளின் அரசியல்... (5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக்கிரமிப்பு வெறியை நாம் அடையாளம் காணத் தவறுவது, எமது விடுதலைக்கான மிகப் பெரும் தடையாக மாறிவிடும் என்பதை புரிந்து கொள்வோம். இத்தகைய ஆக்கிரமிப்பு வெறிதான், "போர் என்றால் போர்", "சமாதானத்திற்கான யுத்தம்" என்ற கோஷங்களின் கீழ் சிறிலங்கா அரசு எமது மக்கள் மீது கோர யுத்தத்தை தொடர்வதற்கான அடிப்படையாக உள்ளது.

"பிரிவினைக் கோரிக்கையை கைவிட வேண்டும்" என்று சிறீலங்கா அரசும் சிங்கள அரசியல் தலைவர்களும் நிபந்தனை விதிப்பதன் பின்னாலுள்ள ஆதிக்க உணர்வை எம்மால் துல்லியமாக அடையாளம் காண முடிகின்றதா? ஒரு தனியான தேசம் என்ற வகையில், நமக்குள்ள சுயநிர்ணய உரிமையை மறுப்பதில் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் நிலவுகின்ற வியப்பூட்டும் வகையிலான ஒற்றுமையையும் மூர்க்கத்தனத்தையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றதா? "ஈழத்தை தவிர எல்லாவற்றையும் தருவேன்" என்ற பிரேமதாசவின் கூற்றிலும், வன்னியில் சந்தித்துள்ள பாரிய தோல்விக்குப் பின்னும் "பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனையாக பிரிவினை கோரிக்கையை கை விட வேண்டும்" என்று சந்திரிகா கோருவதிலும் புதைந்திருக்கிற ஆதிக்கத் திமிரை எம்மால் உணர முடிகின்றதா?

இத்தகைய பின்புலத்தில், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஒரு தேசம் என்றவகையிலும் தனது விடுதலைக்காக வீரஞ்செறிந்த போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்ற ஒரு தேசம் என்றவகையிலும் நாம் முன் வைக்கக் கூடிய நிபந்தனைகள் குறித்து நாம் தெளிவாகவும் பிரக்ஞைபூர்வமாகவும் இருப்பது அவசியம். இத்தகைய நிபந்தனைகள் அவசியமானவை மட்டுமல்ல, அவை நீதியானவையும் கூட என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனையாக, சிங்கள படைகளை முகாமிற்குள் இருக்கும்படியும் நமது மக்கள் மீதான பொருளாதாரத் தடைகளை அகற்றும்படியும் தமிழீழத்தில் இயல்பு நிலையை உருவாக்கும்படியும் கோருவது எவ்விதத்திலும் வெற்றிப் பெருமிதத்தின் வெளிப்பாடு அல்ல. மாறாக, இவை நமது மக்களினுடைய அரசியல் கோரிக்கைகளின் திரட்டப்பட்ட சாரமே. சிறீலங்கா படைகளின் தாக்குதல்களினால் நமது மக்களும் வளங்களும் நாளாந்தம் அழிவுக்குட்பட்டு வருகின்ற நிலையில், நமது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகளினால் அவர்கள் அன்றாடம் வறுமைக்கும் நோய்க்கும் ஆளாக்கப்பட்டு வருகின்ற நிலையில், இத்தகைய துயர்மிக்க சூழலை மாற்றியமைப்பது நமது போராட்டத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாக இருக்கின்றது. எனவே, பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனைகளாக இவற்றை முன்வைப்பது என்பது, நமது மக்களின் உடனடி அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்துவதாகவே அமையும்.

உண்மையில் நமது நிபந்தனைகள் தொடர்பாக நாம் இன்னமும் கூடுதல் பிரக்ஞையுடனும், கூடுதல் தெளிவாகவும் கூடுதல் தீவிரமாகவும் இருப்பது அவசியம். நமது மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை துல்லியமாக சாரப்படுத்தி நிபந்தனைகளாக்குவது மட்டுமல்ல, எத்தகைய சூழலிலும் இந்நிபந்தனைகளில் எந்த ஒன்றையும் கை விடாதிருப்பதும் அவசியம். போராட்ட வழிமுறைகளில் ஒன்றாக - ஒன்றாக மட்டுமே அமைகின்ற பேச்சுவார்த்தைக்காக, எமது தேசத்தின் உரிமைகளை கைவிடுவதற்கோ, எமது மக்களின் நலன்களை விலையாக கொடுப்பதற்கோ எந்த அரசியல் அமைப்புக்கும் உரிமை இல்லை என்பதை நாம் உரத்துச் சொல்ல வேண்டும்.

அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம், நமது மக்களின் உரிமைகள் மீண்டும் நிலைநாட்டப்படுவதில் சிறீலங்கா அரசு ஒருபோதும் நேர்மையுடன் செயற்பட்டதில்லை என்பதை நினைவுபடுத்துவோம். கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைக்கான சூழல் ஏற்பட்ட போதெல்லாம், அதை குழப்புவதிலேயே அது முழுக் கவனத்தையும் கொண்டிருந்தது. அரசியல் பேச்சுவார்த்தை என்ற வழிமுறையை, சர்வதேச அரங்கில் தனக்கான ஆதரவை அதிகரிப்பதற்கான பகடைக்காயாகவே சிறீலங்கா அரசு பயன்படுத்தி வந்திருக்கின்றது.

இந்த உண்மையை நாம் புரிந்து கொள்வோமாயின், சிறீலங்கா அரசுடனான அரசியல் பேச்சுவார்த்தைகளின்போது, நமது நிபந்தனைகள் தொடர்பாக எவ்வளவு உறுதியாக நாம் செயற்பட வேண்டும் என்பது புலப்படும். நமது பத்திஜீவிகளும் சரணாகதி அரசியல்வாதிகளும் வாதிடுவது போன்று, நிபந்தனைகளை முன்வைப்பது என்பது பேச்சுவார்த்தைக்கான கதவுகளை அடைத்து விடுகின்ற தவறான அணுகுமுறையோ அல்லது வெற்றிப் பெருமிதத்தின் விளைவோ அல்ல என்பதும் தெளிவாகும். சரணாகதி சிந்தனைப் போக்கானது தனது மக்களின் பலத்தை புரிந்து கொள்ள மாட்டாது என்பது மட்டுமல்ல, எதிரியின் பலவீனம் கூட அதற்கு பிரமாண்டமான, பயங்கரமான அச்சத்தை ஊட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சந்திரிகாவின்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு வருவதற்கான அரசியல் தீர்வினை காண்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை எதிர்க்கின்றன"

கடந்த மூன்று வருடங்களாக விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தம், மூன்றாவது தரப்பின் மத்தியஸ்த்துடன் அரசியல் பேச்சுவார்த்தை, கௌரவமான தீர்வு பற்றி பல தடவை அழைப்பு விடுத்துள்ள போதிலும், யுத்தத்தை மேலும் மேலும் விரிவுபடுத்தி வந்த சந்திரிகா, புலிகளை அழிப்பதின் ஊடாக நமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்தையும் அழித்தொழித்து சிங்கள இனவாத வரலாற்றில் சாதனை படைக்கும் கனவில் இருந்தவர் என்பது உலகறிந்ததே. தவிர, ரனில் அரசியல் தீர்விற்கு அரசுடன் ஒத்துழைக்க தயார் என்ற அழைப்பிற்கு ஒரு வார்த்தையும் பதில் பகராது இருந்துவிட்டு, திடீரென இவ்வாறு கருத்து வெளியிடுவது பலருக்கும் நகைச்சுவையாக உள்ளது. உண்மையில் நகைக்க வைக்கும் இவரது அணுகுமுறையின் இலக்கானது மிகவும் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட அரசியல் நயவஞ்சகமாக உள்ளது. ஒரு புறம் இவ்வாறு அழைப்பு விடுத்துக்கொண்டு. மறுபுறம் தான் அழைப்பு விடுத்தவர்களுக்கு ஆத்திரமூட்டி, மீளவும் யுத்தத்திற்கான வாய்ப்புகளை வலுப்படுத்துவது இவரது வழமையான வழிமுறையாகும் என்பதும் நாமறிந்ததே.

"ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை காண அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு விடுதலைபுலிகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன்"

ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வென்பது எது? யாருக்கு ஏற்புடையது? அடக்குமுறையாளர்களுக்கும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள மக்களுக்கும் ஏற்புடைய தீர்வா? அல்லது அடக்கப்பட்டு வரும் மக்களுக்கானதா? இதுவரை எத்தனை வாய்ப்புகள் இந்த சிங்கள தலைமைக்கு தரப்பட்டுள்ளது? இதற்கு மேலும் இந்த இனவெறியர்கள் அவகாசம் கோருவதும் சமாதான நாடகமாடுவதும், தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்கிவிட ஏதேனும் ஒரு வாய்ப்பு கிடைக்காதா என்ற எதிர்பார்ப்புடன் என்பது நமது அரசியலில் இன்று அரிச்சுவடி பாடமாகும்.

தம்முடன் கைகோர்க்குமாறு கூறும் இவர், மறுகணம், ஆயுதங்களை துறக்க வேண்டும் என்பார். தமிழீழ கோரிக்கையை கைவிட வேண்டும் என்பார். அழித்தொழிக்கப்பட வேண்டிய கொடூர சக்தி விடுதலைப் புலிகள் என்பார். தமிழ் மக்கள் புலிகளை எதிர்க்க வேண்டும் நிராகரிக்க வேண்டும் என்பார். வெளிநாடுகள் புலிகளை தடைசெய்ய வேண்டும் என அறைகூவல் விடுவார். இதன் மூலம் இவரது உண்மையான சுயம் வெளிப்பட்டு நிற்கும்.

"வடக்குகிழக்கு மாகாணம் உட்பட 8 பிராந்தியசபைகளுக்கும் கூடிய அதிகாரம் வழங்குவேன்"

"சிறுபான்மைப் பிரச்சினைக்கு" இவரிடம் உள்ள தீர்வு இதுதான். இன்னமும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது, இவருக்கு ஒரு "சிறுபான்மைப் பிரச்சினை" என்பதோடு சிறிலங்காவில் உள்ள ஏனைய ஏழு மாகாணங்களினதும் நிர்வாகப்பிரச்சனையுடன் சம்பந்தப்பட்டதொழிய வேறொன்றும் இல்லை. சிங்கள மக்களே வேண்டாம் என்று சொல்லும் ஒன்றை எம்மீதான 50 வருட அடக்குமுறைக்கு தீர்வு என்கிறார் சந்திரிகா. 1994ம் ஆண்டிலேயே எம்மால் கழித்துக்கட்டப்பட்டு, குப்பைக்கூடையில் போடப்பட்டுவிட்ட திட்டப்பொதி இது.

சந்திரிகாவினது அரசியலும், ஏமாற்றும் இப்படி அம்பலப்பட்டு போன பின்பும் சடுதியாக இந்த உரை மேற்கொள்ளப்பட்டது ஏன்? மிகவும் விரிவாகவும், கொடூரமாகவும் முன்னெடுக்கத்திட்டமிட்டு, நகர்த்திக்கொண்டிருக்கும் யுத்தத்தினை மீளவும் ஆரம்பிக்க முன்பு, சமாதானத்திற்காக மீண்டும் முயற்சிப்பதாக எம்மையும் சர்வதேச சமூகங்களையும் ஏமாற்றிவிடலாம் என்ற ஒரு நப்பாசையில்தான்.

யுத்தத்திற்கான ஆயத்தங்களை செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், "சிறுபான்மையினர்" பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அனைத்துச் கட்சிகளுக்கும் சந்திரிகாவும் அவரைப்போன்ற சிங்கள தலைமையும் அழைப்புவிடுவது நமக்கு புளித்துப்போன விவகாரம்.

குறுகிய மனப்பாங்கின் ஒட்டுமொத்த வடிவமாக திகழும் சந்திரிகா மறுதரப்பினரை அவ்வாறாக இருப்பதாக குற்றம்சாட்டுகின்றார். அவர் முன்னர் பல தடவை ஆற்றிய உரைகள் ஒருபுறம் இருக்க, இரண்டாவது தடவையாக வெற்றி பெற்று ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது ஆற்றிய உரை மற்றவர்களை இழிவுபடுத்துவதும் கேவலமானதும், தற்புகழ்ச்சியும் மிக்கதுமாகவே அமைந்திருந்தது.

இலட்சக்கணக்கான மக்களின் தலைவிதியுடன் சொற்சிலம்பமாடும் இப்படியானவர்களுக்கு அரசியல் பாடம் புகட்டும் பொறுப்பு நமது தேசத்திற்கு கிடைத்ததையிட்டு நாம் நிச்சயம் பெருமை கொள்ள முடியும். அக்கடமையை செவ்வனே செய்து முடிப்போம் என மீளவும் உறுதி எடுத்துக்கொள்வோம்!

## மாணவர்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமது சொந்த கோரிக்கைகளுக்காகவும் அண்மைக்காலமாக தமிழீழ மெங்கும் மாணவர்கள் போராடி வருகின்றனர். தன்னெழுச்சியாக வெடிக்கும் போராட்டங்கள் முறையாக அமைப்பாக்கப்பட்டு, மாணவர்கள் பலம் வாய்ந்த சக்தியாக தேசிய இயக்கம் எனும் மைய இழையுடன் நெருக்கமாக இணைக்கப்பட வேண்டும். தமிழீழம் முழுவதும் அது ஊடுருவிப்பலம் பெறவேண்டும் இந்த பலம் வாய்ந்த மாணவர் இயக்கமானது தேசிய நலன்களுக்காகவும், தமது அடிப்படை நலன்களுக்காகவும் விட்டுக்கொடாது போராடும் விதத்தில் தேசத்தின் பலத்தில் கட்டமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது குறிப்பான பிரச்சனைகளுடன் பொதுவான தேசிய பிரச்சனைகளையும் இணைத்து விட்டுக்கொடாது போராடும் போது, நமது விடுதலைப்போராட்டமானது புதிய பரிணாமத்தில் விரிவடைகிறது, பலம் பெறுகிறது கூடவே சர்வதேச சமூகங்களின் அங்கீகாரத்தையும் பெறுகின்றது. இப்படிப்பலம் பெறும் வெகுசன இயக்கங்களானது, விடுதலைப்போராட்டத்தின் போது, நாம் விடும் தவறுகளையும் கூட சுட்டிக்காட்டி எம்மை சரியான திசையில் வழிநடாத்துகின்றன. எமது கடந்த கால வரலாறு மக்கள் சக்தியை அமைப்பாக்காதது மட்டுமல்ல, தன்னளவில் அமைப்பாகும் மக்கள் சக்தியானது எமக்கு எதிராக போய்விடும் என எச்சரிக்கையாக பார்ப்பதும், அல்லது அவற்றை எமது குறிப்பிட்ட தேவைகளுக்காக மட்டும் பயன்படுத்தி விடுவதுடன் நின்றுவிடுவதாகவே இருந்து வந்துள்ளது.

நம்மிடமுள்ள இந்த பலவீனததை புரிந்து கொண்டு, எதிரிகளோ எம்மையும் எமது போராட்டத்தையும் அழித்தொழிக்க தமது மக்களை தவறான வழிமுறைகளில் தமது பக்கம் அணிதிரட்டுவதில் வெற்றி பெற்று வருகின்றனர். நாமோ இந்த விடயத்தில் இன்னமும் வெகுதூரம் பின்னடைந்துள்ளோம். தற்போதுள்ள கால கட்டம் இது குறித்து நம்மை கடுமையாக எச்சரிக்கின்றது.

## தென் தமிழீழ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தை பலப்படுத்தும் வகையில் தேசிய அரசியலுடன் ஒன்று கலக்கும் போது அரசியல் ரீதியில் எதிரி தளர்ச்சியடைவது திண்ணம்.

இந்த ஹர்த்தால் தினக் கூட்டத்தில் மிதவாத அரசியல் தரப்பினரும் கலந்து கொண்டு மக்களின் துயரங்களை நீக்க வேண்டுமெனக் கோரிக்கை வைத்திருப்பது வரவேற்கக் கூடியதாகும். வேறுபட்ட அரசியல் நலன்களைக் கொண்டிருப்பினும் கூட தேசத்தின் அரசியல் நலனுடன் இணைந்து செயற்பட வேண்டியது இன்றைய தேவை என்பது அனைத்துத் தமிழ்த் தரப்புகளினதும் கடமையாகும்.

## குருதிக் கறை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களின் அனைத்து வாழ்வுத்தேவைகளையும் முடக்குவதே இதன் நோக்கம். மருத்துவ, நிர்வாக, உணவு மற்றும் பணச்சுற்றோட்டம், தொண்டர் நிறுவனங்களின் மனிதவுரிமை செயற்பாடுகள் போன்ற அனைத்தும் இதனால் முடக்கப்படவுள்ளன. விடுதலைப்புலிகள் வசம் உள்ள வன்னிப்பகுதி மட்டுமல்ல, தமிழீழத்தின் ஒவ்வொரு மூலையையும் யுத்தக்களமாக்கவும், மக்களை கொன்று குவிக்கவும் பட்டிணி போடவும் ஒத்திகைகள் நடைபெறுகின்றன.

நம்மீதான அழித்தொழிப்பு யுத்தத்தை இன்னும் விரிவான அளவிற்கு மேற்கொள்வதற்கு ஏற்கனவே சந்திரிகா அரசு கொள்கைகளை வகுத்துவிட்டதென்பது தெளிவாகவே நிரூபணமாகி விட்டது. வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் போதே இதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டது என்பதை சுட்டிக் காட்டியிருந்தோம். இந்த புதிய போர் கொள்கையை உக்கிரத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்புகள்மீளவும்தொடங்கிவிட்டன. எனவே இதன் விளைவுகளை முன்னெச்சரிக்கையாகவே அரசியல் ரீதியிலும், பௌதிக ரீதியிலும் எதிர்கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்பது தெளிவு.

இவ்வாறான போர்த்திட்டங்களும் அழித்தொழிப்பிற்கான ஏற்பாடுகளும் சில மாதங்களுக்கு முன்பே விரிவாக விவாதிக்கப்பட்டு, பல தடவைகள் தமது மூளைகளை கசக்கியும் வெளிநாட்டு இராணுவ வல்லுனர்களின் ஆலோசனைகளை பெற்றும் முப்படை தளபதிகளும், பொலீஸ் ஜெனரலும், பிரதானமாக இவர்களின் ஏக தலைமையாகிய அதிபர் சந்திரிகாவும் இணைந்து கச்சிதமாக உருவாக்கியவையாகும். தமது படைகளுக்கு இழப்புகளை குறைத்து வெற்றிகளை குவிப்பது, இந்த வெற்றித்திமிருடன் தமது அதிகாரத்துவ விருப்புகளை எமது மக்கள் மீது திணிப்பது. இதுவே அவர்களின் பிரதான உத்தியாகும். தமது படைகளுக்கு இழப்பை குறைப்பது என்பதன் பொருள் நமது மக்களுக்கு அதிக இழப்புகளையும்பேரழிவுகளையும் ஏற்படுத்துவதே. ஏற்கனவே இவர்களின் கைகளில் பட்ட இரத்தக்கறைகள் காய்ந்துவிட முன்பே, மீளவும் கைகளை நனைக்க விளைகின்றனர். அதே நேரம் இவை எதுவுமே நடவாதது போல அரசியல் பேச்சுக்கு அழைப்பு விடுகின்றனர். இவர்களிடம் இருந்து எப்படிப்பட்ட சமாதானம் எமக்கு கிடைக்கும் என்பதை அறிய காத்திருந்துதான் நாம் பார்க்க வேண்டுமா?

1982ம் அரசுத்தலைவர் தேர்தலில் தன்னை நிராகரித்த தமிழ் மக்களை 1983 இல் இனஅழிப்பின் மூலமும் போர் என்றால் போர் என்றதன் மூலம் பாடம் படிப்பிக்க முயன்ற ஜெயவர்த்தனா வீற்றிருந்த அதேசிங்காசனத்தில் தான், கடந்த தேர்தலில் நமது மக்களால் நிராகரிக்கப்பட்ட சந்திரிகாவும் வீற்றிருக்கின்றார். தனது பாணியில் எச்சரிக்கையும் விடுக்கின்றார் என்பது வியக்கத்தக்க ஒற்றுமை அல்ல. இதுபோன்ற மிரட்டல்களும் ஏமாற்றல்களும் நம்மீதான ஒடுக்குமுறை வரலாற்றில் நன்கறிந்த உண்மையாகும். இவற்றிற்கு எப்போதும் நமது தேசம் அடிபணியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

# இறுதிக் கட்டத்தில் நமது விடுதலைப் போர்!

வணக்கம்!

பாரிய அழிவுத் தாக்குதல்களுக்கான சகல இராணவ ரீதியான ஆயத்தங்களும் முடித்துள்ளது சிறிலங்கா அரசு. ஆழ்ந்த எச்சரிக்கையோடு நம்மை தற்காத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் நாம். இவ்விதழில் உள்ள பெரும்பாலான எழுத்துக்கள் இந்த அக்கறையை வெளிப்படுத்துவதுடன், இன அழிப்பின் புதிய பரிமாணத்தை, பாசிச வடிவை அரசு அடைந்திருக்கின்றது என்பதை விளக்கவும் முயன்றுள்ளோம். மீளவும், தீர்வு என்ற கோஷத்தின் மூலம் யுத்தத்தின் அப்பட்டமான இன அழிப்புப் பண்பை சர்வதேச சமூகங்களின் பார்வையில் இருந்து மறைக்க அரசு முனைவு. நேர்மையான அரசியல் பேச்சுவார்த்தையில் தான் கொண்டுள்ள அக்கறையை விடுதலைப் புலிகளின் தலைவர் பகிரங்கமாக அறிவித்திருக்கின்ற போதிலும் அந்த அமைப்பே சமாதானம் ஏற்படுவதற்கு தடையாக இருக்கின்றது என மீண்டும் மீண்டும் சந்திரிகா குற்றம் சாட்டுவது தனது நேரடி கட்டுப்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள இனவொழிப்பு யுத்தத்திற்கான காரணத்தை வலுவாக நிறுவுவதற்கே என்பதில் நாம் விழிப்பாக இருப்போம்.

ஒரு தற்காலிக அரசியல் நாடகம் என்ற வகையில் அரசினால் முன்னெடுக்கப்படவுள்ள தீர்வு யோசனைகள் விடயத்தில் நாம் கவனமாக செயற்படுவோம். அரசியல் சாசனத் திருத்தமானது அரசு கட்டமைப்புக்குள் குறுக்கப்பட முடியாது என்பதும் நமது தேசிய உரிமைகள் நிலைப்படும் விதத்தில் அது முற்றாக மாற்றப்பட வேண்டும் என்பதும் நமது உறுதியான நிலைப்பாடாக இருக்க வேண்டும். அவ்வாறான மாற்றம் என்பது எமது அரசு இறைமையை நாமே தீர்மானிக்கும் பூரண உரிமை கொண்டதாக இருக்க வேண்டும். மைய அரசு என்ற கருத்தாக்கத்தை தகர்த்து, ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு அரசு முறைமை என்பதாக இருக்க வேண்டும்.

எம்மீது திணிக்கப்பட்டுள்ள யுத்த துயரங்களும் அழுத்தங்களும் சுதந்திர வாழ்விற்கான ஆர்வத்தை நம்மத்தியில் ஆழமாக்கியிருக்கின்றன. இந்த ஆர்வத்தை சிறிலங்காஅரசின் வஞ்சகமான தீர்வுப் பொதியின் மீதான ஆதரவாகக் குவிப்பதற்கு சரணாகதி தமிழ் அரசியல் தலைமைகள் விரும்புகின்றன. எனினும் அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட எமது போராட்ட அனுபவத்தின் ஊடாக அரசின் சுயருபத்தை நமது மக்கள் நன்றாகவே புரிந்து கொண்டிருக்கின்ற நிலையில் இந்தத் தலைமைகளின் துரோக முயற்சிகள் பயனற்றதாக்கப்பட்டு வருகின்றன. கூடவே அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக நமது மக்களிடைய எழுச்சியுறும் போராட்டங்கள் அரசினதும் அதனிடம் சரணடைந்துள்ள தமிழ் தலைமைகளினதும் ஆதிக்க நோக்கங்களையும் முறியடிப்பதற்கான உறுதியான அடித்தளமாக உருப்பெறுகின்றன.

கர்ப்பிணித் தாயின் வண்புணர்ச்சிக்கு எதிராகவும் மாணவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்தும் வட தமிழீழத்தை போன்று தென்தமிழீழத்திலும் நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்ற அனுமதி முறையை எதிர்த்தும் நமது மக்கள் சுயாதீனமான போராட்டங்களை நடாத்தியிருக்கின்றார்கள். இவற்றோடு சிறிலங்காவின் சுதந்திர தினத்தை எமது மக்கள் முற்றாகவே புறக்கணித்திருப்பதும் தமது தொழில் உபகரணங்களை மீள எடுத்து வருவதற்கும் தமது தொழிலை மேற்கொள்வதற்கும் தம்மை அனுமதிக்க வேண்டும் என நமது மீனவர்கள் நடாத்தியிருக்கும் போராட்டமும் குறிப்பான முக்கியத்துவம் பெறுகின்றன.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக நமது மக்களின் அனைத்துப் பிரிவினர் மத்தியிலும் கனன்று கொண்டிருக்கின்ற ஆவேசப் பிளம்பின் தீக்கதிர்களாக இவை வெளிப்படுகின்றன. இத்தகைய போராட்டங்கள் தீவிரமடையமாலும் நமது தேசத்தின் ஏனைய பிரிவினரிடையே பரவி விடாமாலும் தவிர்ப்பதற்காக அரசு மேற்கொள்கின்ற பிரயத்தனங்களையும் மீறி இவை படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் எமது மக்கள் மத்தியில் வெடித்தெழும்பும் யதார்த்தமானது விடுதலைப்போராட்டம், புதிய பரிமாணத்தை நோக்கி வளர்கின்றது என்பதைச் சுட்டுகின்றன.

அரசு நம்மீது இறுதித் தாக்குதலை மேற்கொள்வதற்கு தயாராகுகின்ற இந்த வேளையில், நமது மக்களின் தற்காப்பையும் இறுதிவெற்றியையும் உறுதிப்படுத்துகின்ற மார்க்கங்களை நாம் உருவாக்குவது அவசியம். சிறிலங்கா படைகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கின்ற அதேவேளையில் பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்கள் என்ற வடிவிலும் சர்வதேச மட்டத்தில் முரணற்ற அரசியல் மற்றும் இராஜதந்திர அணுகுமுறைகளினுடாகவும் நாம் இதைச் சாதிக்க முயற்சிப்போம். இராணுவ வெற்றிகளை அரசியல் வெற்றியாக மாற்றுவதிலும், பரந்துபட்ட மக்கள் போராட்டத்தில் சுயமாக இணைவதை சாத்தியப்படுத்துவதிலும் நமது வெற்றியின் அடிப்படை தங்கியுள்ளது. மேலும், குறிப்பாக சர்வதேச சமூகங்கள் மத்தியில் நமது தேசத்தின் குரலாக அடையாளம் பெறுகின்ற பொதுமனிதர்கள் எம்மத்தியில் இருந்து வெளிப்படுவது அவசியமாகின்றது. நம்பகத்தன்மையும் அங்கீகரிப்பும் கொண்டவர்களாகவும் நமது தேசிய நலன்களின் குறியீடாகவும் அமையக்கூடிய இத்தகைய பொதுமனிதர்கள் இன்றைய எமது அரசியல் சூழலில் மிகுந்த முக்கியத்துவமும் அவசியமுமாகின்றது.

சிறிலங்கா அரசியல் வரலாற்றில் அதன் அரசுத் தலைவர் பங்குபற்ற முடியாது போன அவமானகரமான நாளாக அதன் ஐம்பத்திரெண்டாவது சுதந்திர தின விழா. "இன்னொரு தேசத்தை அடக்குகின்ற ஒரு தேசம் தானும் சுதந்திரமாக இருக்கமுடியாது" என்ற மார்க்சின் வார்த்தைகள் இங்கும் நிருபணம். நாம் நிச்சய உறுதியுடன் சொல்வோம்: நமது தேசம் சுதந்திரம் அடையும் போது மட்டுமே, சிங்கள தேசம் அதன் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கும்!

ஆசிரியர் குழு

*15-02-00*

## மக்கள் களம்

தமிழீழம் பத்திரிகையின் வெளிவரும் பெண்ணிய ஆக்கங்களில் தெளிவாகவும், திடமாகவும்கருத்துக்கள் இருக்கின்றன. அவற்றை வாசிக்கும்போது மேலும் தெளிவும், துணிவும், உங்களது அமைப்பில் இப்படிக் கருத்துக்களைக் கொண்ட பெண்கள் இருப்பதுபற்றிய மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. "பெண்களும் துஷ்பிரயோக அரசியலும்" கட்டுரை மிகவும் உடன்படக்கூடியதாக விருந்தது. இக்கட்டுரை இங்கு இன்னும் பலருக்குப் பிடித்திருக்கிறது. பெண்கள் பற்றிய நல்ல ஆக்கங்கள் இருப்பதால் இங்கு என்னைப்போல் இன்னும் வேறுபெண்களும் தமிழீழத்தைப் வாசித்துவருகின்றனர்.

பெண்களுக்கான நேர்மறைப்பாகுபாடு பற்றிய கருத்தில் முழுமையாக உடன்பாட்டிற்கு வரமுடியாததால் நண்பர் ஒருவருடன் விவாதித்தேன். இப்போது ஓரளவு உடன்பட முடிகிறது. நீண்ட காலமாகப் பெண்கள் அடிமைப்பட்டுப் போகும் மனநிலையில் இருந்துவிட்டதால். இந்த நேர்மறைப்பாகுபாட்டில் பழக்கப்பட்டு பெண்கள் தம் அடிமைநிலையிலிருந்து விடுபடுவதற்கு மாறாக மேலும் தமது நிலையில் நின்றுவிட வாய்ப்பிருக்கிற தல்லவா? (உளவியல் ரீதியாகவும்). ஆதலால் பெண்களின் கடுமையான உளவியல் விடுதலைக்கான போராட்டத் தினை ஒரேசமயத்தில் நடாத்த வேண்டியிருக் கிறது. இக்கட்டுரையில் திடீரென்று மேற்கிற்குத் தாவுவது ஏன்? எமது சமூக த்திலேயே நிறைய உதாரணங்கள் உள்ளன. அதுதவிரவும் பெண்விடுதலையைப் பிழையாகக் காட்ட பெண்விடுதலை எதிராளிகள் அடிக்கடி மேற்கைத்தான் உதாரணம் எடுப்பார்கள். அதேபோல்
நீங்களும்?(உதாரணம் வேறுமட்டத்திலா னது என்றபோதும்) நீங்கள் எமது சமூகத்திலேயே உதாரணம் காட்டியிருந் தால் கட்டுரை என்னைப் பொறுத்தவரை மேலும் உரம்பெற்றிருக்கும்.
இப்படித்தாவுவது சுலபம்.

மாலதி
ஜேர்மன்

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்